உ
ஓம்
பரப்பிரஹ்மணே நமஃ

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 8 } உருத்ரோத்காரிஸு ஆனிமீ கஉ
1923ஸு ஜூன்மீ 15உ { பகுதி 12

கடவுள் வணக்கம்.

மத்தர் பேயரொடு பாலர் தன்மையது
மருவி யேதுரிய வடிவமாய்
மன்னு தேசமொடு கால மாதியை
மறந்த நின்னடிய ரடியிலே
பத்தி யாய்நெடிது நம்பு மென்னையொரு
மைய றந்தகில மாயையைப்
பாரு பாரென நடத்த வந்ததென
பார தத்தினுமி துள்ள தோ
சுத்த நித்தவியல் பாகு மோவுனது
விசுவ மாயைநடு வாகவே
சொல்ல வேணும்வகை நல்ல காதிகதை
சொல்லு மாயையினு மில்லையென்
சித்த மிப்படி மயங்கு மோவருளை
நம்பி னோர்கள்பெறு பேறிதோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே. (1)

வெள்ளங் குலாவுசடை வெள்ளக் கருணையினுன்
கள்ளங் குலாவுவஞ்சக் கள்ளனே—னுள்ளத்தி
லில்லனென்று லன்னவன்று னெங்கும் வியாபகத்தா
னல்லனென் றுஞ் சொல்லவழக் காம். (2)

ஏதுக் குடற்சுமைகொண் டேனிருந்தே னையனே
யாதிக்க மோன வருட்டாயே—சோதியா
மன்ன நிருவிகற்ப வானந்த நிட்டையிலே
பின்னமற நில்லாத பின். (8)

அரும்பொருள் விளக்கம்.

1. மத்தர் = ('உன் மத்தம் பிடித்தவன்' என்று கூறுவதுபோல்) எப்போதும் ஒரே விதமாய்ப் புகழ்ந்தவரையும் வைதவரையும் வித்தியாசமாய்க் கருதாமல், தன் தேகத்தைப் பற்றிய சுத்தா சுத்தத்தையும் கவனியாதிருப்பவர்.

பேயர் = பேய்பிடித்தவர்—அவர்களுக்குப் பிறர் செய்யும் துன்பங்களை அப்பேயே தாங்கிக்கொள்வதாக, அவர்கள் அவற்றால் உறுத்தப் படாதவர்கள் போல் இருப்பார்கள்.

பாலர் = குழந்தைகள்—குழந்தைகள் பசி வந்தபோது பாலுண்டு மற்றபடி எவ்விதக் கவலையுமின்றி, எதிர்காலத்தைப்பற்றி எவ்வித எக்கழுமின்றி எதற்கும் அஞ்சுதலுமின்றி, பிறர் சுக துக்கமும் தமக்குத் தாக்காமல், வேண்டுவது வேண்டாமையின்றி ஆனந்தமா யிருக்கும் தன்மையுடையன. அவைகள் ஏதேனும் செய்யினும் எவ்விதப் பயனையும் கருதிச் செய்வதில்லை.

துரியம் = சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி எனும் மூன்றவத்தைகட்கும் அப்பாற்பட்ட நான்காம் நிலை. கருவிகரணாதிகளை யெல்லாம் கழித்த பின் ஆவரணம் அல்லது மாயை யென்பதையும் கடந்து ஆன்மா தான் மாத்திரமாய்த் தனித்து நிற்கும் சுத்த நிலையே துரியமாகும்.

தேசமொடு காலமாதியை மறந்து = கால தேச வஸ்து பரிச் சேதமற்று.

காதிகதை மாயையின் அதியற்புதமான பிரபாவத்தைக் காட்டுதற்கு வாசிட்டத்தில் கூறப்பட்டுள்ள ஒரு கதை.

மத்தர் பேயர் பாலர் அரசர் இவர்கள் தன்மையை யடைந்திருப்பது துறவிகளாகிய சுத்த ஞானிகள் இருக்கும் நிலையாதலால் அவ்வாறு கூறினார்.

2. வெள்ளம்=ஜலம். இங்கு கங்கையைக் குறிக்கும்.

வெள்ளக்கருணையினன்=கருணாசமுத்திரமான ஈசுவரன்.

வியாபகத்தான் அல்லன்=சர்வவியாபக முடையவனல்ல.

"நான் கள்ளம் பொருந்திய வஞ்சநெஞ்சுடையவனாதலின் என் உள்ளத்தில் பரமசிவன் இருக்கமாட்டான் எனில், ஈசுவரன் சர்வவியாபக முடையவன். அதாவது எள்ளுக்குள் எண்ணெய்போல் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து நிற்பவன் என்ற உண்மை பொய் யென்று கூற நியாயமுண்டாகும். ஆகையால் என் உள்ளத்திலும் பரமசிவன் உளன்" என்று பரமாத்மா நமக்குள் அனன்னியமாக உளன் என்பதைத் திறப்படுத்தக்கூறி யருளினார். இதை யெப்போதும் மறவாதிருப்பது அனன்னிய பக்தியாகும். இதனால் சித்தசுத்தியும் அத்துவாரா மெஞ்ஞானமும் சித்திக்கும்.

3. எதுக்கு=என்னத்திற்காக.

உடற்சுமைகொண்டு என் இருந்தேன்=உடலாகிய சுமையைத் தாங்கிக்கொண்டு எதற்காக உலகில் வாழ்ந்துகொண் டிருக்கிறேன்.

பிரமான்ம ஐக்கியமாகிய அத்துவித முத்தி நிலையை யடைதற்கேதுவாகிய நிருவிகற்ப நிட்டையில் நிலைத்து நிற்காமல் தேகத்தைச் சுமந்துகொண்டு திரிவதில் ஒருபயனு மில்லை யென்பது கருத்து.

ஆனந்தபோதினி

உருத்ரோத்காரி௵ ஆனி௴ ௧௨

மதாசாரம்.

ஓதற்கரிய வாதிநாயனும் ஆண்டவன் அருள் கொடளித்த விப்பூவுலகின்கண் ஆன்மாக்கள் அவனையறிந்து வழிபட்டுய்யும் வண்ணம் தோன்றி நிலவும் மதங்கள் பல. எனினும் அவற்றுள் தற்காலம் உலகில் பெரும்பாலாரால் அநுசரிக்கப்படுபவை, நமது சமயம், பௌத்த சமயம், ஈஸ்லாம் மார்க்கம், கிருஸ்து சமயம், என்பவைகளே யாகும். ஒவ்வொரு மதத்தினும் கூறப்பட்டுள்ள நெறி நின்றொழுகற்குச் சில முறைகளும் விதி நிஷேதங்களும் உள. இவையே மதாசாரம் எனப்படும். இவ்வாசாரம் ஒவ்வொரு மதத்திற்கும் வெவ்வேறு மாதிரியாக விருக்கும். சில அம்சங்களில் ஒன்றுக்கொன்று நேர்மாறாகவும் தோற்றும். அவ்வாறாயின் இவற்றில் எது சரி எது தப்புஎனின், அவ்வாறு தீர்மானித்தற்கியலாது. ஏனெனின் அந்தந்த மதத்தின் ஆசாரம் அததற்குப் பொருத்தமாயும், தக்க காரணமுடையதாகவுமே யிருக்கும். சில முக்கியமான விஷயங்களில் எல்லா மதங்களின் ஆசாரமும் ஒரே விதமாகவிருக்கும். திருட்டாந்தமாய் நமது ஆலயங்களெல்லாம் கிழக்குநோக்கியே யிருக்கும். நாம் தெற்கு அல்லது வடக்கு முகம்திருப்பி நமஸ்கரிக்கிறோம். நிட்டை சாதிப்போர் வடக்கு நோக்கியே யமரவேண்டுமென்பது விதி. மஹம்மதியர் மேற்கு நோக்கியே வணங்குகின்றனர். கிருஸ்தவர்களுக்கு இந்தத் திக்கென்ற நியதியில்லை. இவ்வாறிருப்பினும் அந்தந்த மதத்தில் அதற்குத்தக்க காரணமுண்டு. திரியாங்கம், பஞ்சாங்கம், அஷ்டாங்கம், சாஷ்டாங்கம் முதலியவற்றில் ஒன்றாலோ சிலவாலோ கடவுளை வணங்குவதும், மனதை யொருவழிப்படுத்திக் கடவுளைத் துதிப்பதும் ஆகிய இவ்வாசாரங்கள் எல்லா மதத்தினர்க்கும்

பொதுவாகவேயுள. அதோடு எல்லா மதங்களும் சச்சிதானந்த சொரூபியாகிய அந்த ஒரு கடவுளாகிய இடத்திற்கு ஆன்மாக்கள் செல்லவேண்டிய மார்க்கங்களையே காட்டுகின்றன. மார்க்கங்கள் வெவ்வேறாய், தூரம், சமீபமாகவும், நேர்வழி, சுற்றுவழியாகவும் இருக்கக்கூடுமெனினும், கடவுளாகிய இடம்மட்டும் ஒன்றே யாகும்.

ஆதலின் இங்கு நமது மத ஆசாரத்திற்கும், பிறமத ஆசாரத் திற்கும் ஒப்பிட்டுப் பார்க்கவாவது ஒன்று உயர்வு ஒன்று தாழ்வு என்று நிரூபிக்க வெண்ணியாவது நாம் இதை வரையத் தொடங்க வில்லை. மற்றபடி எதற்காகவெனின், மேல்நாட்டுக் கல்வி ஆசாரம் இவற்றின் சகவாசத்தால் அந்நாட்டு நாகரீகத்தின் மயக்கிற் சிக்கி, நமது மதாசாரங்களை யாராய்ந்துணராமல் அவை வீணான மூடக் கொள்கைகளென்று அலட்சியமாய்க் கூறி ஈசுரசிந்தனையே யற்று உள்ளத்தில் உலோகாயதனாய்க் கெட்டழியும் வழிநடக்கும் நம்ம வர்க்கு நமது மதாசாரங்களின் விசேஷங்களைச் சுருக்கமாய்க் கூறி ஆத்மாவின் ஈடேற்றத்திற்கு அவை யவசியம் என்பதை எடுத் துக் காட்டவே இதை வரையநேர்ந்தது. அதுவும் இச்சமயம் வரைய நேர்ந்த காரணமென்னவெனில், உத்தமத் துறவியாகிய பட்டினத்தடிகள் முத்திபெற்றதும், சமயாசாரியரால் பாடப்பெற் றதும், என்றும் மகான்கள் வாசம் செய்ய இச்சிப்பதும், நடராஜப் பெருமான் எழுந்தருளி யிருப்பதுமாகிய திருவொற்றியூர் க்ஷேத் திரத்தில் பிரதி சுக்கிரவாரந்தோறும், சோமவாரமும் அனேகர் சென்னை முதலிய வெளி யிடங்களினின்று அம்மன் தரிசனத்திற் கும் சுவாமி தரிசனத்திற்கும் வருவதைக் காண்கிறோம். இவர்க ளில் உள்ளன்போடு ஈசுவரனைத் தரிசிக்கவந்து ஆசாரத்தோடு அதைச் செய்கிறவர்களும் உண்டுதான். ஆனால், பெரும்பாலோர் வாரமுழுமையும் தெய்வம் என்ற சிந்தனையே யின்றி, எவ்வழியி லேனும் சரி, ஒழுங்கான உடையணிந்து பெரிய மனிதர் என்று பெயர் வைத்துக்கொண்டு யாரை மோசம் செய்தேனும் சரி பொருள் சம்பாதிப்பதும் ஓய்வுகாலங்களிலும் பின்னால் எப்படி யாரை யேய்த்துப் பணம் பறிக்கலாம் என்று சிந்திப்பதும் உண் பதும் உறங்குவதும் அல்லது சிற்றின்பக் கேளிக்கைகளில் காலங் கழிப்பதுமாக இருப்பவர்கள் அன்று வாரத்திற் கொருமுறை யோ இரண்டு வாரங்களுக்கொருமுறையோ உல்லாசமாய்த் திரு வொற்றியூருக்கு வண்டியேறி வருகிறார்கள். இவர்களில் சிலர் தம்

அருமை மனையாட்டி "அம்மனைச் சேவிக்க நான்கூட வருகிறேன். நான் திருவொற்றியூர் பார்த்ததேயில்லை. பட்டினத்தார் கோயிலைத் தரிசிக்க மிக்க ஆசையாயிருக்கிறது" என்றால் "சீ கழுதை வேலையில்லை. இன்னும் இந்தப் பசங்களையிழுத்துக்கொண்டு ஒரு வண்டி வைத்துக்கொண்டு — என்ன இலச்சை! எல்லாம் இன்னொருமுறை பார்த்துக்கொள்வோம்" என்று கூறிவிட்டு நேரே கடைக்குச் சென்று மிட்டாய், பழவர்க்கங்கள், புஷ்பம், தேங்காய், வெற்றிலை பாக்கு யாவும் வாங்கிக்கொண்டு ஒரு முதல்தர ஜட்காவண்டி சகிதம் தங்கள் காதற்கணிகை வீட்டிற்குச்சென்று அவளையும் அவள் தோழியையுமழைத்துக்கொண்டு வருகிறார்கள்.

ஆனால் இத்தகையோர்கூட நல்ல உயர்ந்த ஆடையாபரணங்களால் தங்களை யலங்கரித்துக்கொண்டு கேளிக்கையாக அன்னியர் மெச்சவேண்டுமென்ற எண்ணத்தோடு சந்நதிக்குச் சென்றாலும் வெளிக்காவது ஆசாரத்தோடு காணப்படுகிறார்கள். ஆனால் தன் தாய்ப்பாஷையைக் கலப்பில்லாது இரண்டு வாக்கியங்கள் சரியாய்ப் பேசத்தெரியாத, ஆங்கிலங்கற்ற (அதிலும் அரைகுறையாகவே) அண்ணாத்தைகள் உண்டே, இவர்கள் கோவிலுக்குள் போவதுதான் ஏனோ நமக்கு விளங்கவில்லை — இவர்கள் கடவுளைத் தரிசிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு சென்றால் நெஞ்சில் அச்சம் தானே யுதிக்கும். அதற்குத் தக்க ஆசாரத்தோடும் பயபக்தியோடுமே ஈசுவரத்தியானத்தோடு செல்வார்கள். இவர்கள், வேடிக்கையை அல்லது, மேலே கூறப்பட்ட ஆசாமிகள் அழைத்து வரும் மாதர்களைப்பார்க்க வருபவர்களே. இத்தகையோர் கோயிலில் ஜனங்களில்லாத காலத்தில் எட்டிக்கூடப் பாரார்கள்.

ஒரு சுக்ரவாரம் மாலைப்போது இத்தகைய இரண்டு ஆசாமிகளைச் சந்நதியினெதிரிலுள்ள திருக்குளத்தருகில் கண்டோம். இருவரும் மேல் அங்கியும் (ஷர்ட்) சரிகை அங்கவஸ்திரங்களும் அணிந்திருந்தார்கள். இருவரில் ஒருவன் மேல் வேஷ்டியை ஒரு கையில் சுருட்டிக்கொண்டு சட்டையைக் கழற்றிக்கொண்டே மற்றவனை நோக்கி, "இரத்னம் ஷர்டையிங்கே அதோ அந்தச் செட்டிக்கடையில் வைத்துவிட்டுப்போய், வரும்போது எடுத்துக்கொள்ளலாம்" என்றான். இரத்னம்! என்பவன் "சரி, நோக்கு வேலையில்லையாக்கும். கழற்றிக்கொண்டு, மறுபடி போட்டுக்கொண்டு— ஏனோ இப்படியே போய்வந்துவிட்டால் பேர்கிறது" என்றான்.

மற்றவன்:— அப்படிக்கன்று கோயிலுக்குள் போவதானால் திருக்குளத் தீர்த்தத்தில் கைகாலலம்பிக்கொண்டு ஜலத்தை மேலே புரோக்ஷித்துக் கொண்டேனும் விபூதி யணிந்துகொண்டுதான் செல்லவேண்டும்'' என்றான்.

இரத்னம் என்பவன் வெறுப்போடு மற்றவனை நோக்கி (ஆங்கிலத்தில்) "கிட்டு! தீஸ் ஆர் ஆல் ஸ்டுபிட் ஸுபர்ஸ்டிஷன்ஸ்—ஸ்பிரிங்க்ளிங் தெட் டர்டி வாடர் ஆன் ஹெட்! யூ கென்டு ஆல் யூ லைக் அண்ட் கம் ஸுன். ஐ உல் பி என்ஜாயிங் குட் பிரீஸ் ஹியர்'' என்றான். அதாவது "கிட்டு! இவையெல்லாம் முட்டாள் தனமான மூடக்கொள்கைகள். அந்த அழுக்குச் சலத்தைத் தலைமேல் தெளித்துக்கொள்கிறதாம். நீ வேண்டுமானாலவற்றைச்செய்துகொண்டு சீக்கிரம்வா. நான் இந்த நல்ல கடற்காற்றை யனுபவித்துக்கொண்டு இங்கேயே யிருக்கிறேன்'' என்றான்.

கிட்டு என்பவன் பேசாமற்போய்க் குளத்திலிறங்கிச் சுத்தி செய்துகொண்டு விபூதி யணிந்து சட்டையைக் கடைக்காரனிடம் வைத்துவிட்டு அங்கவஸ்திரத்தை அரையிற் சுற்றிக்கொண்டு தேங்காய் பழம் கற்பூரம் வாங்கிக்கொண்டு இரத்தினத்திடம் வந்தான். பிறகு இருவரும் கோயிலுக்குள் சென்றார்கள். இரத்னம் சட்டையும் மேலே அங்கவஸ்திரமும் அணிந்தபடியே கைபாட்டிக் கொண்டே சென்றான். கிட்டுமட்டும் துவஜஸ்தம்பத்தைக் கடந்து சற்றுதூரம் சென்றபின் கைகளைக் கட்டிக்கொண்டான். நாமும் இவர்களைக் கவனித்துக்கொண்டே இரண்டாம் முறையாகச் சந்நதிக்குள் சென்றோம். கிட்டு சுவாமி சந்நதிக்கும் அம்மன் சந்நதிக்கும் சென்று சேவித்து வந்தான். இரத்னம் என்பவன் "உள்ளே பயங்கரமான புழுக்கம். நீ போய்வா நான் இங்கேயே நிற்கிறேன்'' என்று ஆங்கிலத்தில் வெறுப்போடு மிக அலட்சியமாய்க் கூறிவிட்டான்.

கடைசியில் வெளிவந்தபோது இரத்னம் கிட்டுவை நோக்கி ஏதோ ஒரு பந்தயம் ஜெயித்தவன்போல் "இப்போது நானும் கோயிலைப் பார்த்தேன், நீயும் பார்த்தாய். நீ அனுபவித்த வீண் கஷ்டங்களால் உனக்கென்ன விசேஷபலன் கிடைத்தது?'' என்று ஆங்கிலத்தில் கேட்டான்.

கிட்டு மனவருத்தத்தோடு "நீ கோயிலுக்குள் மட்டும் வந்தாயேயன்றிச் சுவாமியையாவது அம்மனையாவது தரிசிக்கவில்லையே'' என்றான்.

இரத்னம் அது மெய்யென்று அவன் மனச்சாட்சி கூறுவதால் சற்றுநேரம் விழித்தான். பிறகு சமாளித்துக்கொண்டு "அந்த இருட்டிலும் ஜனநெருக்கத்திலும் வந்து சொல்லொணுக் கஷ்டத்தோடு உன்போல் வியர்வை யொழுகிக்கொண்டு அக்கல் லுருவங்களை — ஒன்றேனும் மானிடவுருவும், மற்றது எந்த வுருவமுமல்ல, குழவிக்கல்லில் பாதியிருக்கும் (இவன் மூலஸ்தானம் பார்க்காதவன்)— அவற்றைக் கண்ணுல் கண்டுவிட்டால்தான் சுவாமியைத் தரிசித்ததாகுமோ ?" என்றுன்.

பாபம் கிட்டு பதில் கூறமுடியவில்லை. அதற்குமேலும் மௌனமாயிருக்க நம்மால் முடியவில்லை. சம்பாஷணையால் இருவரும் மறையோர் குலமைந்தர்கள் என்று தெரிந்ததால் நம்மனம் பின்னும் வேதனை யடைந்தது. நாம் கிட்டுவை நோக்கி "ஐயா ! நீர் அக்கல் உருவங்களை ஈசுவர சொரூபமாகப் பாவித்து தரிசித்ததால் தன்னைவிட விசேடபலன் நீர் அடையவில்லையென்று உமது நண்பர் கூறுகிறுர். நீர் விசேடபலன் அடையாதிருப்பினும் தரிசித்ததற்குத் தக்க பலனை யடைவீர் என்பது சத்தியம். இவர் ஈசுவரனைத் தரிசித்ததாக இவர் மனச்சாட்சி கூறுதென்பதும் சத்தியம். ஏனெனில் நீர் அவ்வுருவை யீசுவரனென்று நம்பினீர், இவர் கல்லென்றெண்ணி யிருக்கிறுர். அவரவர் மனேபாவப்படி பலன் கிடைக்கும்" என்று கூறிவிட்டுத் துரிதமாய்ச் சென்றேம். அந்த இரத்னம் என்பவன்போன்ற அறிவிலாமூடர் இன்னும் பலர் இருக்கலாகுமென்றெண்ணியே யிதை வரையலாயினேம்.

இனி முன்னே, மற்ற மதங்களுக்கு ஒவ்வொரு பெயரைக் கூறிவிட்டு, நமது மதத்திற்குத் தனியாய்ப் பெயர் கூறுமல் நமது மதம் கூறுவானேன் ? என் ஹிந்துமதம் என்று கூறவில்லை எனின், அதற்குக் காரணம் இருக்கிறது. நாம் ஹிந்து என்பதை யிதுகாறும் யாவரும் அறிந்தே யிருப்பீர்கள். அதனுல் நமது மதம் என்று நாம் கூறியது ஹிந்துமதமேயென்று அறிந்துகொள் வீர்கள். நீங்கள் அவ்வாறு அறிந்துகொள்ளக்கூடுமே யன்றி நமது மதத்திற்கு ஒரு பெயர் இல்லை. எப்படியெனில்,

1-வது:—ஹிந்துமதம் என்றுல் ஹிந்துக்கள் அனுசரிக்கும் மதம் என்றே பொருள். கிரேக்கர் முதலிய நாட்டார் ஏதோ காரணங்கொண்டு நம் பாரதநாட்டிற்கு இந்தியா என்றும் அதன் ஜனங்களுக்கு ஹிந்துக்கள் இந்தியர் என்றும் பெயரிட்டார்கள்.

அவ்வழியே நமது மதத்திற்கு ஹிந்துமதம் என்ற பெயரும் வந்ததே யன்றி அது நமது மதத்தின் பெயராகாது. நாம் அனு சரிக்கும் மதத்தைக் கூறுவது வேதமாதலின் இதற்கு வைதீகமதம் எனவும், உட்பிரிவுகளில் சைவம் வைஷ்ணவம் எனவும் கூறத் தகுமே யன்றி நமது மதத்திற்கு வேறு பெயரில்லை. நமது மதத் தின் உண்மையறியாத அன்னிய மதத்தவர்—நாம் அதாவது ஹிந்துக்கள் அநுசரிக்கும் மதம் என்றறிவதற்குக் குறிப்பாய்—கந்தன் புத்தகம் என்பதுபோல், ஹிந்துமதம் என்று கூறிக் கொண்டார்கள். கந்தன் புத்தகம் என்றால் கந்தனுக்குச் சொந்த மான புத்தகம் என்று அதைக் குறிப்பிடுமேயன்றி அது அப்புத்த கத்தின் பெயராகாது. அதன் பெயர் பாரதம் என்றிருந்தாலு மிருக்கலாம். பாகசாத்திரம் என்றிருந்தாலு மிருக்கலாம்.

2-வது. ஏன் இப்படி வேறு பெயரில்லை யெனில் இம்மதம் மற்ற மதங்களைப்போல் மானிடராகச் சனித்த ஒருவரால் தாபிக் கப்பட்டதல்ல. இதற்குக் காலவரையும் கூறமுடியாது. ஏனெனில் இதில் கூறப்பட்டுள்ள பாரமார்த்தீக விஷயங்கள் ஆதியும் அந்தமு மின்றி என்று மழியாது நித்தியமாய், எவராலும் மறுக்கக்கூடா தவைகளாய், ஏனெனில் பிரத்தியட்ச அநுபவமாய் உணரக்கூடி யவைகளாயுள்ள சத்தியங்களே யாகும்.

3-வது. வேதத்தில் கூறப்பட்ட உண்மைகள் இயற்கையாய் என்று முள்ளவையேயன்றிப் புதிதாக ஒருவர் கண்டுபிடித்துக் கூறியவையல்ல. ஆனால் நம் முன்னோர்களாகிய மகான்கள் தம் அரிய முயற்சியால் தங்கள் ஆத்ம சக்தியால் அவ்வுண்மைகளை அநுபவமாய்ப் பிரத்தியட்சத்தில் கண்டறிந்து அவற்றை விரிவாய் எழுதியும், தம் சந்ததியார்க்கு அநுபவத்திற்கு வரும்படி போதித் தும் வைத்தார்கள். அவர்கள் வழியறிந்து தங்கள் ஆயுளைப் பல யுகங்கள் வரையிலுங்கூட விர்த்தி செய்துகொண்டு இவ்வுல கம் பஞ்சபூதமாய் மாறும்போது அவ்வப் பூதமயமாய்த் தாங் களும் பிரளயலட்சணத்தையும், பிறகு சிருஷ்டியுண்டாகும் இலட் சணம் முதலியவற்றையும் யாவற்றையும் கண்டறிந்து நமக்காக அவற்றை வெளியிட்டு வைத்தார்கள். (வாசிட்டத்தில் புசுண்டர் கதையில் இதைப்பற்றி விரிவாய்க் காணலாம்) அத்தகைய மகான் கள்தான் வேதத்தைப் பிரித்தெழுதி வைத்தார்கள். அவர்கள் பெயர்கள், அவற்றை யெழுதியவர்களாய்க் கூறப்பட்டிருக்கின்

றனவேயன்றி, நமது வேதம் பலரும் கும்புகூடி எழுதிய ஒன்றல்ல. அன்னிய நாட்டாரும் அன்னிய மதஸ்தருமாகிய சிலர் எழுதிய நமது தேசசரித்திரங்களில் வேதம் என்பது சில காலத்திற்குமுன் இரிஷிகள் என்ற சிலரால் எழுதப்பட்டதென்றும், ஆதியில் நம்மவர் நாகசர்ப்ப உருவம் செதுக்கப்பட்ட கற்களையும் மரங்களையும் சூரியனையும் தெய்வங்களாக வணங்கி வந்தார்களென்றும் எழுதி யிருக்கிறார்கள். இது மட்டுமல்ல. ஆதியில் நமது நாகரீகம் சுத்த கேவலமாகவும், நம் முன்னோர் மிக்க மூடத்தன்மையில் இருந்ததாகவும் இப்போது மேல்நாட்டார் இங்கு வந்தபிறகே நாம் நாகரீகம் செல்வம் சீர்திருத்தம் யாவுமடைவதாகவும், அதோடு நம்மவர் துரைத்தனம் செய்யவே தெரியாதவர்களென்றும் ஒரு சாத்திரமு மறியாதவர்களென்றும் எழுதியிருக்கிறார்கள். இப்போது அவர்கள் வரைந்தவை பெரும்பொய்யென்றும், அவர்கள் நம்மை மயக்கித் தாங்களும் தம்மவர்களும் க்ஷேமமடையக் கருதியே யப்படிச் செய்தார்களென்றும், இப்போது மேல்நாட்டார் தாங்கள் புதிதாய்க் கண்டுபிடித்ததாகக் கூறும் சாத்திரங்களில் பெரும்பாலானவை நம் நாட்டிலிருந்து ஆதியில் கிரேக்கர் முதலியோரால் கொண்டுபோகப்பட்டு அவ்வழியாய் மேல்நாட்டாரால் அறிந்துகொள்ளப்பட்டவை யென்றும் தற்கால மேல்நாட்டு ஆராய்ச்சிக்காரர்களான கல்விமான்களாலும் நம்நாட்டு அறிவாளிகளாலும் தக்க அத்தாட்சிகளோடு நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. நம்மவர்கள் எங்கும் நிறைந்த கடவுளை அவருடைய அனந்தசத்திகளாகிய பலவற்றின் சொரூபங்களிலும் கண்டு இப்போதும் வணங்குவதுபோல் அப்போதும் வணங்கி வந்தார்களேயன்றி வேறில்லை.

அத்தகைய மாறுபாடான தேசசரித்திரங்களும் வேறு நூல்களும் நம் சந்ததியாரின் தற்பெருமையையும் தைரியத்தையும் உற்சாகத்தையும் மேலோங்காவண்ணம் செய்து, நாம் மேலிருந்து கீழிறங்கி வருகிறோம் என்ற உண்மையை யுணராது அதற்கு மாறாக, நாம் ஆதிமுதல் மிக்க கேவல நிலைமையிலிருந்து இப்போது அன்னியரால் மனிதத்தன்மையான மேல்நிலைமையை யடைந்துவருகிறோம், என்று நாம் கருதும்படி, கொடிய மாயப்பொடியை தூவிவந்தன. நற்காலமாய் இப்போது உண்மை வெளிப்படத்தொடங்கிவிட்டது.

உலகில் மனிதனால் இதுகாறும் கண்டுபிடிக்கப்பட்டனவும், இனிமேலும் கண்டுபிடிக்கக் கூடியனவுமாகிய எல்லாச் சாத்திரங்களும் நமது அறுபத்துநான்கு கலைக்கியானங்களில் அடங்கிவிட்டிருக்கின்றன. ஆனால் அவற்றில் பல மறைவுண் டிருக்கின்றன. அது வுண்மையாயின் ஏன் நம்மவர் முன்னமே நீராவி, மின்சாரம் முதலியவற்றையும் கண்டு பிடித்து உபயோகத்தில் கொண்டுவரவில்லை யென்று கேள்வி பிறக்கலாம். அவர்கள் திரிகாலக் ஞானிகளாகையால் காரணமறிந்தே அவ்வாறு செய்யா தொழிந்தனர். நம்மவர்க்கு உலகம் அநித்தியமென்ற வுண்மை தெரியும். ஆகையால் உலகவாழ்க்கையை நித்தியமாகிய பேரின்பமடைவதற்கு ஒரு உபகரணமாக மட்டுமே கருதினார்களன்றி, உலகபோகமே மனிதன் அனுபவிக்கவேண்டிய நித்திய சுகம் என்று அவர்கள் எண்ணவில்லை. அதற்குமாறாக உலகபோகம் வெறுக்கத்தக்க தென்பதும் மனிதஜன்மம் நமக்குக் கிடைத்தது ஆண்டவனை யறிந்து அவனை யடைதலாகிய பேரின்பப்பேற்றை யடைவதற்கே யென்றதுமாகிய கொள்கையோடு நடந்துவந்தார்கள். நமக்கும் அவ்வாறே நூல்களின் வழியாய்ப் போதித்திருக்கின்றனர்.

இதனாலவர்கள் உலகில் நாம் மிக்க ஆவலும் மனப்பதைப்புமின்றி மனோநிம்மதியோடு சுகமாகவும் க்ஷேமமாகவும் வாழ்வதற்கும், அதோடு கூடியவரையில் அதிக காலத்தை ஆன்மார்த்த விஷயங்களில் (ஈசுர உபாசனை, சாத்திர ஆராய்ச்சி, ஞானப்பியாசம் முதலியவைகளில்) செலவழிப்பதற்கும் அனுகூலமாக விருக்க அவசியமானவைகளை மட்டும் வெளியிட்டுப் போதித்து அனுபவத்திற்கு வரச் செய்தார்கள். அதனாற்றான் நம் நாடு பல்லாயிர வருடங்கள் இணையற்ற நாகரீகம் செல்வம் கல்வி சுகம் யாவும் நிறைந்ததாகவே யிருந்துகொண்டிருந்தது. அக்காலங்களில் நம் நாட்டார் கிரீஸ், அரேபியா ஆப்ரிகா, சைனா, ஜப்பான் முதலிய தூரதேசங்களுக்கெல்லாம் கப்பல்களில் சென்று வர்த்தகம் செய்து வந்தார்கள்.

மேல்நாட்டார் நாகரீகமடைந்து பூரணமாய் இரண்டாயிர வருடங்கள்கூட ஆகவில்லை. ஆனால் மேல்நாட்டார் "நம்மாலியன்றவரை உலகில் எவ்வளவு போகங்களை யனுபவிக்க முடியுமோ அவ்வளவும் அனுபவிக்கத்தான் நாம் பிறந்தோம், இதைவிட வேறு அடையத்தக்க மேலான இன்பம் ஒன்றுமில்லை" என்ற கொள்கை

யோடு பஞ்சபூதங்களை யெவ்வளவுவரை யடக்கியாண்டு ஆச்சரிய மான காரியங்களைச் செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்யத் தொடங்கிவிட்டார்கள். கடைசியில் ஆசையும் பொறாமையும் அளவுமீறி அதிகரித்துவிடவே, ஒவ்வொரு ஜாதியாரும் மற்ற யாவரையும் அடக்கித் தாமே உலகையாள வேண்டுமென்ற ஆவல் கொண்டு ஒரு நொடியில் ஒரு பெரிய நகரை யழிக்கவும் பல்லாயி ரம் ஜனங்களை விஷப் புகை, விஷ நீரால் கொல்லவும் கருவிகளைக் கண்டுபிடிக்கிறார்கள். அதாவது இரண்டாயிர வருடங்களுக்குள் உலகை யடியோடழிக்கும் நிலைமைக்கு வந்துவிட்டார்கள். இதற் காகவே நம்மவர் இவற்றைக் கைப்பற்றவில்லையே யன்றி அவர்க ளிடம் சாத்திரங்களில்லாமலில்லை.

4-வது. நமது வேதம் கடவுளின் பூரண இலக்ஷணங்கள், ஆன்மாவின் இலக்ஷணம், ஆன்மா ஜன்மமெடுத்த காரணம், ஜன்ம விவரம், ஆன்மா கடவுளையடையும் மார்க்கம் இவற்றைப் போதிப் பதோடு, கடவுள் தாம் செய்யும் சிருட்டியாதி கிருத்தியங்களில் எத்தகைய சக்திகளை யுபயோகிக்கிறார் என்பதையும் அதைப்பற் றிய மர்மங்களையும் கூறுகிறது. இவற்றால் நமது வேதத்திலுள்ள விஷயங்கள் கடல்போன்று பரந்துள்ளவை. இவைகளை மீண்டு விரிக்கின் பெருகும்.

நிற்க, நம்வேதம் ஆண்டவனை அருவமாகத் தியானித்து அவன ருளைப்பெறவேண்டு மென்பதோடு நிற்கவில்லை. ஏனெனில் உலகில் ஆண்டவனை யருவமாய் உபாசிப்பது எல்லாராலும் ஆகக்கூடிய காரியமல்ல. உலகில் பலஅதிகாரிகள் உளர். கர்ம அளவின் வித்தி யாசப்படி தரத்தில் பலவிதமுண்டு. ஆகையால் நமது வேதத்தில் மோக்ஷமடைவதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சோபானங்கள் நான்கு படிகளாகக் கூறப்பட் டிருக்கின்றன. இவைகள் தக்க மந்திரவிதிகளோடும் ஆசாரத்தோடும் இயற்றப் படவேண்டும். யாவற்றிற்கும் தக்க காரணமுண்டு.

மனிதன் அடையவேண்டியது மோக்ஷம். மனிதன் முக்கிய நோக்கம் மோக்ஷமே. மந்தமதியினர் அழியும் அற்ப விஷயங் களை யிச்சித்துக் கடவுளை யுபாசிப்பார்கள். சித்த சுத்தி யின்றி மோக்ஷமார்க்கம் கிட்டாது. சரியையாதிகளை யனுசரிப்பதால் சித்த சுத்தி யுண்டாகிச் சீக்கிரம் மனம் ஞானமடையப் பக்குவப் படும்.

"கோயிலுக்குச் சென்று சுவாமியைத் தரிசிப்பது தானே முக்கியம். குளத்தில் என் சுத்திசெய்து கொள்ளவேண்டும்?" என்று கருதலாகாது. இன்றேல் சித்த சுத்தியுண்டாகாது. மனச் சுத்தியிருந்தால் போதும் என்று வாயால் கூறலாமே யன்றி ஏககாலத்தில் மனச்சுத்தி யொருகாலு முண்டாகிவிடாது. ஒரு துறவி கோயிலுக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்கிறுன். அவனுக்கு ஒரு ஆசாரமும் வேண்டுவதில்லை. ஏனெனில், அவன் அந்தக் கரணங்கள் முன்னமே சுத்தியடைந்து ஈசுவரன் அவன் உளத்தைக் கோயில் கொண்டிருக்கிறுன். அவன் தனக்கும் தேகத்திற்கும் சம்பந்தமே யில்லை யென்று துணிந்தவன்.

மற்றையரெல்லாம் ஆசாரம் தவறின் செய்யும் பூசைகள் ஒரு காலும் பயன்படா. ஆசாரமே பக்தியை விளக்குகிறது. பக்தி யின்றி ஈசுவரனருள் கிட்டாது. ஒருவன் தொழில் முறைமையில் அவனுக்கு மேல் அதிகாரியா யுள்ளவன் அவன்போன்ற சாதா ரண மனிதனே. அவன் இவனுடைய தொழிலை மேல்பார்வை பார்ப்பவனேயன்றி இவனுக்கு அன்னமளிப்பவனல்ல. அப்படி யிருந்தும் அவன் எதிரில் செல்லும்போது இவன் பயபக்தியோடு உடைகளை யொழுங்கு படுத்திக்கொண்டு, அவயவங்களைச் சரி யான நிலையில் வைத்துக்கொண்டு, அவனுக்கு முன் தலை குனிந்து வணங்கி நமஸ்கரித்து நிற்கிறுன்.

அப்படி யிருக்க எவ்வளவோ கருணையோடு நாம் தம்மிடம் வந்து சேருவதற்காகத் தநுகரண புவன போகங்களை நமக் குத் தந்து உயர்ந்த ஜன்மத்தையு மளித்துச் சதா கருணையே காட்டிவரும் தாயினும் இனிய ஈசுவரன் முன் செல்லும் நம்மிடம் உண்மையான நன்றியும் பக்தியும் இருந்தால் நாம் சட்டை மாட் டிக்கொண்டும், அசுத்தமாகவும் அவன் சந்நதியில் பிரவேசிப் போமோ.

ஈசுவர தரிசனத்திற்குச் செல்லும்போது தேகத்தைச் சுத்தம் செய்துகொண்டு, மாசிலாச் சுத்தஉடை யணிந்துகொண்டு செல்ல வேண்டும். விபூதியோ, திருமண்ணோ அவரவர்க்குத் தக்கபடி யணிந்து அனுஷ்டானம் செய்துகொள்ள வேண்டும். விலை மதிப் புள்ள டம்பாகாரமான உடைகளும் ஆபரணங்களும் அணிந்து அலங்காரம் செய்துகொண்டு போகக் கருதலே கூடாது. அலங்கரித்தல் என்ற எண்ணமே கொள்ளலாகாது. ஆடவர் வேஷ்டியை முழங்காலுக்குக் கீழ்விடாது, மேல் வேஷ்டியை

இடையிற் கட்டிக்கொண்டு செல்லவேண்டும். கரங்களைக் கூப்பிக்கொண்டோ கட்டிக்கொண்டோ சந்நதிக்குள் சென்று வலம் வரல் முதலியன செய்யவேண்டும். மனம் சுத்தமாய் ஈசுர சிந்தனையிலேயே யிருக்கவேண்டும். வாய் அவனைச் செபித்தபடி யிருக்கவேண்டும். கண்கள் அவன் சொரூபம் தவிர வேறொன்றில் நாட்டம் வைக்கலாகாது.

நமது மதாசாரங்கள் ஒவ்வொன்றும் தக்க காரணத்தோடு ஏற்படுத்தப்பட்டவை யென்றும், அவை ஆன்மார்த்தப் பயனை யளிக்கத்தக்கவை யென்றும் நன்குணருமாறு நமது சகோதர சகோதரிகளை வேண்டிக்கொள்ளுகிறோம். இச்சிறு சஞ்சிகையில் இவ்வளவே அளவுமீறிய இடங் கொண்டுவிட்டதால் இவ்வளவோடு நிறுத்தி, இவற்றால் விளையும் பயனைப்பற்றி யின்னொரு முறை கூறுவாம்.

ஓம் தத் ஸத்.

கம்பராமாயண நீதிச்செய்யுள்.

(376-ம் பக்கத் தொடர்ச்சி)

(20) திறந் திறம்பிய காமச் செருக்கினால்
மறந்து தத்த மதியின் மயங்கினார்
இறந் திறந்திழிந் தேறுவ தேயலால்
அறந் திறம்பின ராருள ராயினர்.— (சுந்-பிணி-96)

(21) பொருளுங் காமமு மென்றிவை போக்கிவே
றிருளுண் டாமென வெண்ணல ரீதலும்
அருளுங் காதலிற் றீர்தலு மல்லதோர்
தெருளுண் டாமென வெண்ணலர் சீரியோர்.—(ஷை-98)

பிரம்மாஸ்திரத்தால் கட்டப்பட்டு தசக்கிரீவனெதிரில் விடப்பட்ட மாருதி, அவ்விராவணனுக்கு நீதிபோதிக்குஞ் சந்தர்ப்பத்துள்ள விப்பாக்களின் பொருள். (20) "அநுசிதமாகிய காமமயக்கத்தால் தம்மைத் தாம் மறந்து, மதிமயக்கங்கொண்டு, நீதிதவறி நடந்தோர், இம்மையிற் சகல செல்வங்களையு மிழந்து மரணமடைந்து நிரயந்துய்த்து, மீட்டும் பிறந்து உழல்வதேயன்றி, யாவர்தாம் நிலைபெற்ற வாழ்வை யடைந்தனர்? (21) ஓ! இராவணா! உண்மையுணர்வுடைய பெரியோர், பொருளுங் காமமுமாகிய இவ்விரண்டையன்றி வேறு நரகமுண்டென்றும், தானமும், ஜீவகாருண்யமும், காமமில்லாமையுமாகிய இவைகளைவிட வேறு முத்தியுண்டென்றுங் கருதமாட்டார்கள்" என்றார். (எ-று.)

இவற்றால் காமமானது தனக்குச் சிறிதேனு மிடங்கொடுப்போரினறிவை மயக்கித் தீநெறிகளிற் செலுத்தி நரகத்திற்றள்ளி வருத்துமாக

வின் அதற்குச் சிறிதும் இடந்தராது, அறிவென்னும் வாள்கொண்டு சேதிக்கவேண்டுமென்பதும், "மதம் மோகம் குரோதம் துன்மார்க்கமும் மூர்க்கமும் யார்க்கும்," உண்டாக்கி அறிவைக்கெடுத்துத் தீநெறிப் புகுத்துவதாகலின், "ஓடும் இருநிதியும் ஒன்றாகக் காணும்" தம் மைத்தாம் மறவாப்பெரியோர், காம செல்வங்களைக் கருவெனக் கருதிப் போக்கி, தானமும் சீவகாருண்யமும் காமமின்மையுமாகிய ஞானசோபானங்களைக் கைக்கொண்டு, அவற்றின் பயனாய் மனச்சுத்தம் பக்திவிராகமாதிய சான்றாண்மை யுடையோராய், தாம் சச்சிதானந்த சொரூபமென்னும் அபரோக்ஷானுபவ ஞானத்தை யவற்றின் வாயிலாயடைந்து, வேதனையற்றுச் சர்வதுக்கநிவிர்த்தி பரமானந்தப்பிராப்தி வடிவமுத்தி நிலையை யடைவராதலின், இந்நெறியே செந்நெறி யென்று யாவரும் கடைப்பிடித் தொழுக முயலல்வேண்டுமென்பதும் பெற்றாம்.

தருமந் தவறினோர் நல்வாழ்வடையா ரென்பதை விளக்கும் இந்நூலி லுள்ள வேறு வாக்கியம்.

"வாழ்மைதா னறம்பிழைத் தவர்க்கு மாகுமோ?"

(22) தோல்லநுங் கால மெல்லாம் பழகினுந் தூய ரல்லார்
புல்லல நுள்ளந் தூயார் போநுந்துவ ரெதிர்ந்த ஞான்றே.
ஒல்லைவந் துணர்வு மொன்ற விருவரு மொருநா ளுற்ற
எல்லியும் பகலும் போலத் தழுவின ரெழுவிற் றோளார்.

(உயுத்த-விபீடணனடை-123.)

"அடைக்கலமென்று வந்தோரை யாதரிப்பதே முறைமையாகலின் சுக்ரீவ! நீயேயேகி அவ்விபீஷணனை யழைத்துவிரைக" என்ற, சுவாமியின் ஆஜ்ஞையின்படி சென்றபோது இருவரும் பரஸ்பரம் ஆலிங்கனம் செய்துகொண்டதைக் கூறும் இச்செய்யுளின் பொருள். "பரிசுத்த குணமுடையவரல்லாப் புல்லர் அநேககாலம் ஒருவரோடொருவர் கூடிப் பழகினும் மனமொத்த நட்பினராகார். மனத்திற் பரிசுத்தமுடைய பெரியோர் கண்டமாத்திரமே மனங்கலந்த நட்பாவார். (இதனால்) இருப்புத் தூண்போன்ற தோள்களை யுடையவர்களான சுக்ரீவனும் விபீஷணனும் ஒருவரையொருவர் பார்த்தபொழுதே இருவர் மனமும் ஒரு சேரக்கலக்க ஒரு தினத்திற் பொருந்தியிருக்கிற இரவும் பகலும்போலத் தழுவிக்கொண்டனர்" என்பதாம். இதனால் பொறாமை, பொய், வஞ்சனை, கோபம் முதலான தீக்குணங்களுடையவர்களாகலின் அற்பர்கள் எவ்வளவு காலம் பழகினும் பயன்படுவதில்லை. சுத்தமனப் பெரியோர் கண்ட மாத்திரமே வெகுநாள் பழகியவர்களைப்போலக் கலந்த கேண்மையராவர் என்பது விளங்குகின்றது. "நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள்ளாதே," "ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை, இருநிலம்பிளக்க வேர்வீழ்க்கும்மே," "அளவளாய், நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்," "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்

சிதான், நட்பாங்கிழமை தரும்" என்ற ஆன்றோர் வாக்கியங்களும் இப்பொருளன.

(23) தீர்வரு மின்ன நம்மைச் செய்யினுஞ் செய்ய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தஞ் செய்கையிற் பிழைப்ப துண்டோ
கார்வரை நிறுவித் தன்னைக் கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி யமர ருய்ய வமிழ்துபண் டளித்த தன்றே.(ஷை-128)

(இ-ள்.) மிக்க அருளையுடைய பெரியோர்கள் தமக்குப் பிறர் நீக்க முடியாத தீமைகளைச் செய்தாலும், தமக்கியற்கையாயுள்ள அருள் செய்வதினின்றுந் தவறுவதுண்டோ? தேவர்கள் மந்தரமலையை நாட்டி நெருப்புப்பொறி பறக்குமாறு கலக்கிக் கடைந்த காலத்தும் பாற்கடலானது அத்தேவர்கட்குச் சாவாமருந்தாகிய அமுதத்தையே கொடுத்ததல்லவா? (எ-று.)

தன்னைத், 'தன் மனைவியை யபகரித்துச் சென்ற சத்துருவின் றம்பி' யென்பதையும் பாராது, அடைக்கலமீந்த விராமனது பெருந்தன்மையைக் கண்டு வியந்து விபீஷணன் கூறிய வாக்கியமிஃது.

பொருளிலார்க் கிவ்வுலக மில்லாததுபோல அருளிலாருக் கவ்வுலக மில்லை யென்பதறிந்து அருளையே ஆபரணமாகக்கொண்டொழுகும் ஆன்றோர், தமக்குப் பிறர் பல துன்பங்களைச் செய்தாலும், 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலவும்,' 'மாந்தர் குறைக்குந்தனையும் குளிர்நிழலைத் தந்து மறைக்கும் மரம்போலவும்,' அன்னோர்க்கிதத்தையே புரிவர். நன்மைசெய்தோர்க்கு நன்மைசெய்யுந்தன்மை இழிந்தோர் கண்ணுமுண்டன்றே? துன்பஞ்செய்தோருக் கின்பஞ்செய்தலே அருளுடைமையாம். இதுபற்றியே பொய்யாமொழியாரும் "இன்னுசெய்தார்க்கும் இனியவே செய்யாக்கால், என்னபயத்ததோ சால்பு" என்றார். நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம் என்பவாகலின், அருளைப் பெரியோர் இயற்கைக் குணமாக்கொண்டிருப்பர். இது நோக்கியேபோலும் இயற்கைப் பொருள்களையே உதாரணமாகக் காட்டுகின்றன கவிகள். ஆகலின், "அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம், பூரியார் கண்ணுமுள" என்னுங் குறளின்படி, எல்லாச் செல்வங்களினும் சிறந்ததும் முத்திநெறிக் கின்றியமையாத் துணையாவதுமாய அருளுடையராயொழுக முயலவேண்டும் என்பது, இச்செய்யுளின் தேர்ந்த கருத்தாமென்க.

(24) ஆய்வினை யுடைய ராகி யறம்பிழை யாதார்க் கேல்லாம்
ஏய்வன நலனே யன்றி யிறுதிவந் தடைவ துண்டோ?
மாய்வினை யியற்றி முற்றும் வருணன்மேல் வந்த சீற்றம்
தீய்வினை யுடையார் மாட்டே தீங்கினைச் செய்த தன்றே.
(வருணனை வழிவேண்டு-80)

(இ-ள்.) எக்காரியத்தையும் ஆலோசித்துச் செய்யுந்தன்மை யுடையராய்த் தருமநெறியினின்றும் தவறு தொழுகுவார்க்கு எக்காலமும் நன்மை

புண்டாகுமே யல்லாமல் துன்பமுண்டாகுமோ? அழித்துவிடும்படியாக வருணன்மேலுண்டான கோபமானது, தீவினைபுடையவர்களாகிய இராக்கதர்க்கே தீமையைச் செய்தது. (எ-று)

வருணன் தன் வேண்டுகோளுக்கிரங்கி வராததைக்கண்டு சினங்கொண்ட இராமன், அவ்வருணனை யழிப்பேனெனக் கோதண்டத்தை வளைத்து அம்பெய்யுங்காலை, வருணன் ஓடிவந்து பணிதலும், இராகவன் சீற்றந்தணிந்து அவன் விருப்பப்படி வீணாகாத தன் சரத்தை, மருகாந்தாரமெனுந் தீவில் நூறுகோடிக்கதிகமாயுள்ள இராக்கதர்மே லேவி யவர்களை யழித்ததாகக் கூறுஞ் சந்தர்ப்பத்துள்ள இச்செய்யுள், எப்போதும் கடவுளை நம்பி நல்வழிப்படருவோர்க்கு நன்மையேயுண்டாமன்றித் தீமையுண்டாகாது. ஒருகால் உண்டாயினும் ஆதவனைக்கண்ட பனிபோல் நீங்கும். தீயோர் முதலில் இன்பமடைவதாகக் காணப்படினும் முடிவில் பலவித துன்பங்களை யடைந்து, குடும்பசமூல மழியப்பெற்று, பழியும் பாவமும் தொடர மீளாநரகத்தாழ்வர். இவ்வாறழிந்த குடும்பங்கள் எண்ணிறந்தன.

'துஷ்டர்கள்தாம் சுகமாயிருக்கிறார்கள். தருமம் பார்த்து நடப்போருக்குத் துன்பந்தான்,' என நினைப்போருமுண்டு. இது அறியாமை. ஒருவன் தன்னிரு புதல்வரில் நல்லபிள்ளையானவன் சிறிது தீயகாரியம் செய்யினும் தண்டித்துப் புத்திபுகட்டலும், துஷ்டப்பிள்ளையை அங்ஙனம் செய்யாது விட்டுவிடுதலும் போலவே, கடவுள் நம்மைச் சீர்திருத்தவே துன்பம் விளைத்தலுமுண்டு. இதனுண்மையை, "தெய்வமுள தென்பார் தீயசெயப்புகின், தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும்—தெய்வம்—இலதென்பார்க் கில்லைதன் இன்புதல்வர்க்கன்றே, பலகாலும் சொல்வார் பயன்" என்னும் குமரகுருபரர் வாக்கானு முணர்தலாம். தீயோர் நன்மையும் நல்லார் தீமையும் அடைந்ததாக எச் சரித்திரமுமில்லை. ஆகவின் தருமநெறியிற் செல்லலே தகுதியுடைத்தாமென்பதைப் போதிக்கின்றது.

(தொடரும்)

பூ. ஸ்ரீனிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
ராணிப்பேட்டை.

காப்பி - தேத்தண்ணீர்.

பண்டைக்காலத்தில் நம்முன்னவரெல்லாம் சாத்தீர்த்தம் என்றும் நீத்துப்பாகம் என்றும் சொல்லப்படுகிற பழஞ்சோற்று நீரை அதிகாலையில் ஆனந்தமாயருந்திச் சுகதேகிகளாய் நீடூழிகாலம் வாழ்ந்திருந்தனர். கலியுக நாகரிகம் நிறைந்த தற்காலத்திலோ நம்மவரெல்லாரும் நன்மையும் சுகத்தையும் தரக்கூடிய நீத்துப்பாகத்தை விட்டு விட்டுக் காப்பியென்றும் தேத்தண்ணீரென்றும் புதுவகை பானங்களையே அருந்தி வருகிறார்கள். படுக்கையைவிட்டு எழுந்திருக்கும்போதே சிறு குழந்தையானது 'காப்பி'

என்று சொல்லிக்கொண்டே எழுந்திருக்கிறதென்றால் தற்காலம் காப்பிக் குடி எவ்வளவு தூரம் பரவிவிட்டதென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். விதவையான பாட்டிகள்கூட தங்களுக்குச் சாப்பாடு இல்லாவிட்டாலும் பரவாயில்லை காப்பி இல்லாமல் தீராது என்கிறார்கள். காப்பியில் காப்பின் (Coffein) என்று சொல்லப்படும் ஒரு விஷப்பொருள் அடங்கியிருக்கிறது. சாதாரணமாய் ஒரு கப் காப்பித் தண்ணீரில் 4 கிரேன் காப்பின் இருக்கிறது. காப்பியை ஓர் பானமாக உபயோகப் படுத்தாமல் மருந்தாக உபயோகிக்கலாம். அது நரம்புகளை முறுக்கேற்றி இரக்தநாடிகளில் திணுக்கு உண்டாக்குகிறது. நோயாளிகளுக்கு அது கொடுக்கவேண்டியது அவசியந்தானா என்பது வைத்தியருக்குத்தான் தெரியும். அதுவும் இவ்வித நோயாளிக்கு இவ்வளவு கொடுக்கவேண்டுமென்பது அவர்களுக்கே தெரியும். சிலருக்குக் குறைவாகவும் சிலருக்குக் கூடுதலாகவும் கொடுக்கவேண்டியது வரும். வேறு சிலருக்குக் குணம்தராமல் வேறு பல வியாதிகளை உண்டாக்கும். இவைகளை யெல்லாம் கவனித்துச்செய்யவேண்டியது தேர்ந்த வைத்தியர்களுக்குத்தான் தெரியும். நம்மில் அநேகம்பேர் ஓயாத காப்பிக் குடிகாரராகிவிட்டார்கள். அப்படி ஆனதினால் நல்ல சுகதேகிகளாயிருக்க வேண்டிய நடுப்பிராயத்தில் பலவித வியாதிகளுக்காளாகி வாதைப்படுகிறார்கள். காப்பியை மிகுதியாய் உபயோகிப்பதனால் தூக்கமின்மையும் நரம்புத்தளர்ச்சியும், மனக் குழப்பமும், நினைவு தடுமாற்றமும், ஒழுங்கீனமான இரத்த ஓட்டமும் இன்னும் பலவிதமாய் ஜீரணக்கருவிகளில் தொந்தரவுகளும் ஏற்பட்டுவிடுகின்றன. கண்ணில் ஒளிமங்குதலும், கண் குருடாகுவதும், மிதமிஞ்சினக் காப்பிக் குடியினால்தான் என்றால் அதன் கொடுமையை இன்னும் சொல்லவும் வேண்டுமா.

தேத்தண்ணீரும் காப்பியைப்போலவே விஷவஸ்து கலந்த பானமாகிறது. அதில் டானின் (Tannin) என்ற விஷவஸ்து சேர்ந்திருக்கிறது. தேயிலையானது எவ்வளவுநேரம் சுடுள்ள தண்ணீரில் இருக்கிறதோ அவ்வளவு அதிகம் அந்த வஸ்து அதில் இறங்குகிறது. இதையும் காப்பியைப் போலவே மருந்தாக உபயோகப்படுத்தலாம். அதுவும் தேர்ந்த வைத்தியருடைய அனுசரணையின்பேரில்தான் செய்யவேண்டும். தற்சமயம் ஒவ்வோர் ஊரிலும் வீதிதவறாமல் ஏற்பட்டிருக்கும் காப்பி ஹோட்டல்களையும் டீ ஷாப்புகளையும் பார்த்தால் இப்பானங்களை நமது ஜனங்கள் எவ்வளவு தாராளமாய் உபயோகப்படுத்தி வருகிறார்கள் என்பது நன்றாய் விளங்குகிறது. ஐயோ! ஏழை ஜனங்கள் இவைகளின் கெடுதியை இன்னும் அறியாமலிருக்கிறார்கள். அறிந்தவர்களுங்கூட வழக்கமாய்விட்டதே நிறுத்தமுடியவில்லையே என்றுசொல்லி அடிக்கடி சாப்பிட்டுக்கொண்டே வருகிறார்கள். இவைகள் மிதமிஞ்சினவுடன் நம்சரீரத்திலுள்ள சகல கருவிகளிலும் தீங்குசெய்கின்றன. சடுதியான மரணங்கள் கூடச் சம்பவிக்கின்றன. முந்தின நாள் இரவு 8 மணிவரையும் தன் இஷ்டரோடு சந்தோஷமாய்ப் பேசியிருந்து வீட்டிற்குப் போனவர் மறுநாள்

காலையில் மரித்துவிட்டார் என்று கேள்விப்பட்டால் இம்மாதிரி மரணத்தைப்பற்றி என்ன யோசிக்கிறீர்கள். காலக்கொடுமையோ மட்டுக்கு மிஞ்சின டீ காப்பிக்கொடுமையோ. இப்படி எத்தனையோ மரணங்கள் சம்பவிக்கின்றன. காப்பி டீ முதலானவை நம் வழக்கத்துக்கு வருமுன்னிருந்தவர்கள் இந்தமாதிரி மரணத்துக்குள்ளானது வெகு அபூர்வம். இப்போதோ சகஜமாய்விட்டது. நித்தியம் ஓரோரிடத்தில் ஒரொன்று நடந்துகொண்டு வருகிறது. 'இப்படி டீ காப்பிக்குடி மிஞ்சினதினால் நம் ஜனங்களுக்குள் மனக்கிளர்ச்சியும், முற்கோபமும், மதிமோசமும் இருக்கிறது ஆச்சர்யமாகமாட்டாது'. இருதய வியாதிகளும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன என்று சொல்லுகிறார் டாக்டர் ராமாராவ் என்பவர்.

(ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்.)

சக்தி தத்துவம்.

1. பிரம்மமானது ஜகஜீவபரங்களாய்த் தோன்றுகிறது. ஜெகம் என்றால் உலகம். ஜீவன் என்றால் உலகத்தில் வாழும் பிராணிகள். பரம் என்றால் சிருஷ்டி, திதி, ஸம்ஹாரங்களை நடாத்தும் பிரம்மா விஷ்ணு ருத்திரர்கள்.

2. ஜெக ஜீவ பரங்களெல்லாம் உண்மையில் பிரம்மத்தின் தோற்றமேயன்றி வேறல்ல. இவ்வாறிருக்கப் புறமதத்தார் ஒருவர் பள்ளியில் வாசிக்கும் மாணுக்கர்களை நோக்கி, உங்கள் மதத்தில், மூன்று கடவுளிருக்கின்றன. கடவுள் ஒருவராயிருக்க மூன்று எப்படிச் சொல்லலாமெனக் கேட்கிறார்கள்.

அதற்குச் சமாதானஞ் சொல்லத்தெரியாத இந்துப் பிள்ளைகள் ஆந்தைபோல் விழிக்கின்றனர். இத்துடன் விடுகிறார்களா கிறிஸ்தவர்கள்.

பிரம்மாதானே உலகிலுள்ள எல்லாவற்றையுஞ் சிருஷ்டித்தவர். சரஸ்வதியையும் அவர்தானே சிருஷ்டித்தார். அப்படியிருக்க அவர் தம் பெண்ணாகிய சரஸ்வதியைத் தாமே கல்யாணம் செய்துகொள்ளலாமா என்னும் அசந்தர்ப்பமான கேள்வியைக் கேட்கிறார்கள்.

3. முன்கூறியபடி பிரம்மமானது திரிமூர்த்திகளாய்த் தோன்றி, சிருஷ்டி, திதி, சம்மாரம் என்னும் முத்தொழிலை நடத்துகிறதென்று வைத்துக்கொள்வோம். சிருஷ்டிப்பதற்கு வித்தை அவசியம். ஆதலின், பிரம்மாவானவர் வேதமாகிய வித்தையைக் கொண்டிருக்கிறார். வித்தையைத்தான் சரஸ்வதி என்கிறோம். சரஸ்வதி என்பது கையும் காலும் தலையுமுள்ள ஓர் ஸ்திரீயைக் குறிக்கவில்லை; வித்தையையே குறிக்கிறது. அவனுடைய நாக்கில் சரஸ்வதி இருக்கிறாளெனின் அவனுடைய நாக்கில் சரஸ்வதியென்று 150 பவுண்டு நிறையுள்ள ஓர் பெண்ணிருக்கிறாளென்று அர்த்தமாகுமா? இப்படித்தான் பிரம்மாவின் நாக்கில், சரஸ்வதி இருக்கிறாளென்பதும் பிரம்மாவுக்கு சரஸ்வதி மனைவி என்பதும். இந்தத் தத்துவத்தை யறியாமல் கிறிஸ்தவர்கள் அவலட்சணமான கேள்விகள் கேட்கின்றனர்.

4. இக்கேள்விகள் ஆபாசமென்பதை அறியாமல், பள்ளிப் பிள்ளைகள் வீணாய்க் கெட்டுப்போகின்றனர். இரக்ஷிக்கும் தொழில் விஷ்ணுவுக்குண்டு. இரக்ஷிக்கவேண்டுமானால் பணமிருக்கவேண்டும். பணத்தை லட்சுமி என்கிறோம். இப்போதும், பணக்காரனை லட்சுமி புத்திரன் என்கிறோம். நிஜமாகவே லட்சுமி என்பவள் ஓர் பெண்ணாகவும் அவள் விஷ்ணு என்னும் புருஷனுக்கு மனைவியாகவு மிருந்தால், அவ்விஷ்ணுவுக்குச் சொந்தமான வைகுண்டத்தை, லட்சுமி புத்திரர்களாகிய பணக்காரர்களன்றோ பங்கிட்டுக்கொள்வார்கள், ஆதலின், லக்ஷ்மி என்பது தனத்தைக் குறிக்கும் சொல்லென் றறிக, இம்மாதிரியே சம்ஹாரம் செய்வதற்குத் தோள்வலி வேண்டும். அதாவது சக்தி அவசியம். இந்தச் சக்தியைத் தான் ருத்திரனுக்கு மனைவி என்று சொல்கிறோம். மேற்கூறியவற்றால் சரஸ்வதி, லட்சுமி, பார்வதி யென்னும் பதங்களெல்லாம் முறையே வித்தையையும் செல்வத்தையும் சக்தியையுங் குறிக்கின்றன வென்று, புறமதஸ்தர் கண்டுகொள்வாராக. முதலில், ஸ்தாபிக்கப்பட்ட பிரம்மமே சரஸ்வதி, அந்த பிரம்மமே லட்சுமி, அந்த பிரம்மமே பார்வதி, அந்த பிரம்மமே திரிமூர்த்திகளும், அந்த பிரம்மமே சகலமும். ஆனதால் இந்தத் தத்துவத்தையுணர்ந்து இந்து மாணாக்கர்கள் புறமதஸ்தர்களின், வினாக்களுக்குத் தக்கபடி விடை யளிப்பார்களென் றெண்ணுகிறோம்.

தத்துவ தரிசனியில்

வை. செ. துருசாமி பண்டாரம், துகை, சேலம்.

நட்பு.

நட்பாவது ஒருவர்க்கொருவர் உதவியா யிருப்பது. இது மானுடராய, நம்மொவ்வொருவரு மறிந்தொழுகவேண்டிய தவசியமாதலின், இதை நன்காராய்வாம்;

நட்பு=நேசம். (நள் - பகுதி, பு - விகுதி)

இது, மேற்கொண்டோரின் செய்கைக்கேற்ப, நீடித்திருப்பினுமிருக்கும், அன்றி உடனே கெடினுங்கெடும், நலனைக் கொடுப்பினுங் கொடுக்கும். ஆதலின், நட்புக்கொளுமுன், செவ்வனே ஆராய்ந்து நட்டல் வேண்டும்.

நம்மை நட்பாகக்கொள வருவோரின் நட்பாளர், நற்குணராவென நன்காராய்ந்தும், பின் அவரைப்பற்றியுமாராய்ச்சி செய்தல் வேண்டும். அவ்வாறின்றி யோசியாது நட்டல், பெருந்தீங்கினை யூட்டி வளர்ப்பது போலாகும். ஆன்றோரும், "ஆய்ந்தோய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை, தான் சாந்துயரந்தரும்" என்றார்.

இனியாருடைய நேசம் நீடித்திருக்கும்; யாருடைய நேசங் கெடுமென்பதை யாராய்வாம்: நேசிப்போரிற் சிலர், தங்காரிய முற்றுந்துணை நேசித்துப் பின்னீங்குவர்; சிலர் நம்மைக் கெடுக்கும் வண்ணமே நேசிப்பர்.

(இத்தகையோர் பகைவராவர்) இவரெலாம் நேசராகார். ஔவையாரும், "அற்றகுளத்தி னறுநீர்ப்பறவைபோ, லுற்றுழித்தீர்வா ருறவல்லர்" என்றார். மூர்க்கர் நேசத்தை, "நூற்றாண்டு பழகினு மூர்க்கர்க்கேண்மை, நீர்க்குட்பாசிபோல் வேர்க்கொள்ளாதே" எனவும், அறிவுடையார் நேசத்தை, "ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை, இருநிலம் பிளக்க வேர்வீழ்க்குமே" என்றுங் கூறினர். மூடரிடத்து நேசமாயிருத்தலினும், பகைமையா யிருத்தல்மேல். ஏனெனில், மூடரின் பகையால் பெரும்பாலுந் துன்பமே யுண்டாகாது; உண்டானாலும் எளிதிற்போக்கிக் கொள்ளக்கூடியதாயுமிருக்கும்; நீங்காவிடினுமவை, நட்பினாலுண்டாகுந் தீங்கினைப்போலவ்வளவு அதிகமாயுங் கஷ்டமாயுமிராது. தீயோர் நட்பு, காலைச் சூரியனின் சாயல் (நிழல்) போல் குறைந்துகொண்டும், மேலோர் நட்பு, மாலைச் சூரியனின் சாயல்போல் வளர்ந்துகொண்டும் போகுமென்பது ஆன்றோர் கொள்கை.

நம்நாயனாரும், "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதி
பின்னீர பேதையார் நட்பு" (என்றார்.)

நல்லோர் நட்பு மூன்றாம்பிறைச் சந்திரனைப்போல் வளரும்; மூடர் நட்பு, பூரணச் சந்திரனைப்போல் பின்னாற் குறையுந்தன்மை யுள்ளது என்பதாம்.

மேலும் நட்பைப்போ லீட்டுதற்கரிய பொருளொன்று மிலையாதலான் ஆராய்ந்தே நட்டல் வேண்டும்.

தெண்ணீருள்ள, ஏரி, தடம் முதலியவற்றில் சாக்கடைநீர் சேர்ந்தவுடன், தன் இயற்பெயரை நீக்கியும், பாலுடன் கொஞ்சம் ஜலம் சேர்ந்தால் தன்னிறமாறியும், பேதஸ்வரூபமுள்ள ஜலம், பால், என்றழைக்கப்படுவனபோன்று, நல்லறிவினரைச் சேர்ந்த வறிவிலிகளும் நற்குணராவர். நல்லோர், தன்னேசர், தீயவழியிலிறங்காதனை போடுவர்

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு" (குறள்)

என்றபடி தக்கவமைய மாபத்திலுதவுவர். தீயரோ, அவ்வாறின்றிக் கெட்ட விடயங்களிலாழ்த்தித் துன்புறுமிடத்துத் தாமுங்கைவிட்டுக் களிப்பர். நல்லோரைச் சேரச் சேர, ஆரோக்கியமும், தீயோரைச் சேரச் சேர, நோயும் வளரும். நட்டபின்னாராயலாகாதோ வெனின், நன்றன்று;

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு."

என்றார் நம் மெய்ஞ்ஞானச் செல்வராகிய நாயனார்.

நட்டபின் பிரிதலாகாது. "கூடிப்பிரியேல்" என்னும் நம்மூதாட்டியாரி னமுதவாக்கிங் குணரத்தக்கது. மேலும்,

"குற்றமும் ஏனைக் குணமு மொருவனை
நட்டபின் நாடித் திரிவேனேல் — நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
அறைகடல்சூழ் வையம் நக" (நாலடியார்)

நான் ஒருவனை நேசித்தபின், அவனுடைய குற்றத்தையும், குணத்தையுமா ராய்ந்து திரிவேனுகில், நேசரது இரகசியங்களை வெளித்தெரியாமல் மறைக்காதவன் அடையுங் கதியை அடையக்கடவேன் என்று கூறியுள்ளார். மேலும்,

" குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்ரு
வினனு மறிந்தியாக்க நட்பு." (குறள்.)

என்பதற்கிணங்க, குணத்தையும், குடிப்பிறப்பையும், குற்றத்தையும், சுற்றத்தையும், அறிந்தும் நேசித்தல் வேண்டும்.

இனி நட்டோரொழுகவேண்டிய தெங்ஙனமெனச் சிறிதாராய்வாம்:

நட்பாள ரிருவரு மொத்த மனதுடையவரா யிருத்தல்வேண்டும்; இன்றேல் நட்புக்கெடும். குற்றமாராய்வதானுல், ஏனையரிடமுங் காணலாம். ஆதலின் குற்ற மிருக்கின் கவனித்தலாகாது. நட்பிலாவயலார் செய்த தீங்குகளையே, பொறுத்தல், அறிவின்மிக்கார் கொள்கையெனக் கூறி யிருப்பதால், நட்டோர்செய்த அற்பக் குற்றங்களை, ஏன் பொறுத்த லாகாது? முன்னேரும்,

" தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தா ராயின்—அவரைத்
தமரினு நன்கு மதித்துத் தமரன்மை
தம்மு ளடக்கிக் கொளல்." (நாலடியார்)

எனக் கூறியதை இங்குய்த்துணர்வதவசியம். எஞ்ஞான்றும் கைவிடப் படாதோர் நஞ்சுற்றத்தாராய இயற்கை நட்பாளராவர். "குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை" கண்ணைக் குத்தியதென விரலைத் துணிப்பாரிலை யாதலின்; பொறுக்கக் கூடிய குற்றங் கண்டவிடத்துக் கண்டித்தல் நலம். ஆனல் ஒரு காரியம் முடியும் வண்ணம் ஒருவரிடம் நேசிக்க வேண்டின், அவரின்னுரென வாராயாது நட்புக்கொள்வது காரியங்கொள்வோர் கடன்.

பெரியோரும் " தாநட் டொழுகுதற்குத் தக்கா ரெனவேண்டா
யார்நட்ப தாயினு நட்புக் கொளல்வேண்டும்
காநட்டு நாறுங் கதுப்பினுய் தீற்ருதோ
நாய்நட்டா நல்ல முயல்." (நாலடியார்)

இதன் பொருள் :—நாயோடு சேர்ந்தாலும் நல்ல முயல் கிடைக்கும்; என்ற பழமொழிப்படி, தங்காரிய முற்றுந்துணை, நட்புக்கொள்வதற்குத் தக்காரெனவுந், தக்காரில்லாரெனவு மாராய்த லவசிய மின்ருமென்பது. மேலும்,

" பகைசேரு மெண்ணுன்கு பற்கொண்டே நன்னு
வகைசேர் சுவையருந்து மாபோற்—ருகைசேர்
பகைவரிட மெய்யன்பு பாவித் தவராற்
சுகமுறுத னல்லோர் தொழில்."

என்பது ஆன்ருேரின் கொள்கையும் நிற்க, நாமிந்த வுலகின்கண், நேசித்து

வாழ்தலுக்கு, நல்ல நட்பாளர் வேண்டுவ தவசியமாதலால், அத்தகை யோரையடைய முன்னாராய்ந்து நல்லோர்களையே நட்டல்வேண்டும். விரிக்கின் நமதானந்தன் இடங்கொடானென் றஞ்சி இத்துடன் நிறுத்தினேன். ஆன்றோர் பிழைபொறுத் தருள்புரிவாராக. கடவுள் நம்மைக் காப்பாராக.

B. சுப்ரமண்ய முதலியார்,
தலைமை உபாத்தியாயர், ரிஷிவந்தியம்.

(செந்தமிழ்ப் பத்திரிகை. தொகுதி 20, பகுதி 6-ல், திரிசிரபுரம், டி. வி. சாமிநாத ஐயர், பி.ஏ., எல்.டி. அவர்கள் எழுதியிருந்தது.)

அந்தணர் என்போர் யாவர்?

அந்தணர் என்னும் சொல், அம்=அழகிய (செம்மையான), தணர்= தண்மை (குளிர் தன்மை) யுடையவர் (அதாவது, செம்மையான கருணை வாய்ந்தவர்) என்று பொருள்படும். அங்ஙனம் உயிர்களிடத்திற் கருணையுள்ளார் யாவரும் குணத்தால் அந்தணர் ஆவரேயாயினும் அது, பிராமணர் என்ற ஒரு ஜாதியாரையே சிறப்பாகக் குறிக்கும். இந்தச் சிறப்புப் பொருளை இக்காலத்திற் சில தமிழர்கள் மறுக்கிறார்கள். அவர்கள் எந்த ஆதாரங்கொண்டு மறுக்கிறார்களோ நமக்குத் தெரியவில்லை. திருக்குறள் 3-வது அதிகாரம் 10-வது செய்யுள் தங்களுக்குச் சான்றாக இருக்கிறதெனக் கூறுவார்போலும். அதாவது :—

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்" என்பதாம்.

இக்குறள் அந்தணர் யாவர் என்று குறிப்பிட வந்ததேயொழிய, அறவோரை வரைய வந்ததில்லை. இச்செய்யுள் உள்ள அதிகாரம் நீத்தார் பெருமையைக் கூறுவது. அவர்கள் ஐம்புலன்களை அடக்கி யறம் கைக்கொள்ளுபவர். அவ்வறங்களிற் சிறந்ததும், எளிதிற் செய்யவல்லதும், உலகிற்கு நன்மை தரத்தக்கதுமாயது "அஹிம்ஸை." இந்தத் தர்மம் யாவரும் செய்யவேண்டியதாயினும், சிலர் ஜாதிபற்றியும், தொழில்பற்றியும்-பழவினையின் பயனும், ஹிம்ஸையை விலக்க இயலாதவரா யிருக்கின்றனர். அறத்தின் ஆறு பலவிதம்; ஆகையால் அறவோரும் பலராவர். என்றாலும், யாதொரு உயிர்க்கும் ஹிம்ஸையைச் செய்வதில்லை என்று சங்கற்பித்து அவைகளிடம் கருணை பாராட்டுவதையே முக்கிய தர்மமாகக் கொண்ட ஒரு ஜாதியாரனைவரும் அறவோராவர் என்று திருவள்ளுவநாயனார் "அஹிம்ஸையை" மேலான தர்மமாக உலகத்துக்குத் தெரிவிக்கவும், அங்ஙனம் கூறினார் என்று விளங்குகிறது. ஆதலால் இக்குறளுக்கு 'மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மைபூண்டொழுகலான், அந்தணர் என்போரே அறவோராவர்' என்று பொருள்கொள்ளல் வேண்டும். வேறு

எவ்விதம் கொள்ளினும் சிறப்பன்று. எளிதிற் பொருள்கோடலும் அன்று. அதிகாரமுறைக்கும் முரண்.

இனி, அந்தணர் என்பது ஒரு ஜாதியின் பெயராய்ப் பிராமணரையே குறிக்கும் என்பதற்குப் பிறமேற்கோள்களும் உள.

"ஐயர் வேதியர் இருபிறப் பாளர்
மெய்யர் மிக்கவர் மறையோர் பூசுரர்
அந்தணர் நூலோர் அறுதொழி லாளர்
செந்தீ வளர்ப்போர் உயர்ந்தோ ராய்ந்தோர்
ஆதி வருணர் வேத பாரகர்
விப்பிரர் தொழுகுலத் தோர்வேள்வி யாளர்
முப்புரி நூலோர் முனிவ ரென்றிவை
தப்பில் பார்ப்பார் தம்பெய ராகும்.

என்ற சேந்தன் திவாகரச் சூத்திரத்தில் அந்தணர் பார்ப்பாரென்றும், அறுதொழிலாளர் என்றும் வழங்கப்பட்டிருக்கிறது. இது ஒரு ஜாதியாரைக் குறிக்கிறதேயன்றிக் குணத்தினரைக் குறிப்பதன்று. இங்ஙனமே, சூடாமணி நிகண்டிலும்,

"ஐயர்வே தியரே நூலோ ரறுதொழி லாள ராய்ந்தோர்
மையில்பூ சுரரே செந்தீ வளர்ப்பவர் தொழு குலத்தோர்
பொய்யிலந் தணரே யாதி வருணர்முப் புரிநூன் மார்பர்
மெய்யர்விப் பிரரே வேத பாரகர் வேள்வி யாளர்"

"இருபிறப் பாளர் பார்ப்பார் ஏற்றமேற் குல ருயர்ந்தோர்
வருமறை யவர்தம் பேராம்" என்றும்,

ஒரு ஜாதித்தன்மை குறித்து வழங்கப்பட்டிருக்கிறது. 'பொய்யிலந்தணர், என்று கூறியது அக்காலத்திலேயே போலியந்தணராய் ஏனையோரும், அந்தணர் என்று தங்களை யழைக்க முயன்றதுபற்றிப்போலும். திவாகரத்திலும் அங்ஙனமே "தப்பில் பார்ப்பார்" என்று கூறியது தப்புடைப்பார்ப்பாருமுளர் என்று சூசிப்பிக்கிறது. மேலும், குறளாசிரியர், செங்கோன்மை என்ற அதிகாரத்துள்,

"அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியா
நின்றது மன்னவன் கோல்"—என்றும்,

கொடுங்கோன்மை என்ற அதிகாரத்துள்,

"ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்"—என்றும்,

கூறியிருப்பதை யொப்பிட்டுப் பார்த்தால் அந்தணர் என்பதும் அறுதொழிலாளர் என்பதும் ஒரு ஜாதியாரான பிராமணரைக் குறிக்கின்றனவன்றிப் பொதுவாய் அறவோரைக் குறிக்காமை விளங்கும். இன்னும், குறளாசிரியர் ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில்

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்"

என்று அருளியதில், 'பார்ப்பான் பிறப்பொழுக்கம்' என்பதனல், பிறப்பால் பார்ப்பானை உணர்த்தியதேயன்றி, பார்ப்பான் குணமுடைய ஏனையோரைக் குறிக்காமை எளிதில் உணரப்படும்.

மேலும், தமிழிற் சேக்கிழார் புராணத்தில் அந்தணர் வீதியென்றும், சுந்தரமூர்த்தி நாயனர் சரித்திரத்தில் "அந்தணர் அடிமையாதல் கண்டிலம்" என்றும் பார்ப்பார்தனித்தன்மை வழங்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் ஜாதி அந்தணரைக் குறித்தே சொல்லப்பட்டிருக்கின்றன.

இது நிற்க; சிலர் குறளாசிரியர், கிறிஸ்தவமதக் கொள்கையைப் பெரும்பாலும் பற்றினவர் என்றும், வேறுசிலர் சமணமதக் கொள்கையை உட்கொண்டவர் என்றும், கூறுவர். தமிழரிற் சிலர், வள்ளுவர் ஆதித்திராவிடரின் மதத்தையும் ஆசாரத்தையும் கைக்கொண்டவர் என்று வ்யவஹரித்து, ஆரியரல்லாதவரின் மதம் என்று தனியே என்று தென்னுட்டிலிருந்ததாயும், அந்தமதாசாரத்தைக் குறளாசிரியர் குறளில் வெளியிட்டிருக்கின்றனரேயன்றி, ஆரியர் மதாசாரத்தைச் சொல்லவில்லையென்றும், அபிப்பிராயப் படுகிறார்கள். இவை மெய்யன்று. எனெனில், குறளாசிரியர் அபிப்பிராயத்தை அவர் இயற்றிய நூலிலிருந்தும் அவர் காலத்திருந்த வித்வான்களுடைய மேற்கோள்களைக் கண்டும் தெரிந்துகொள்ளவேண்டுமேயன்றித் தம் மனம்போனவாறு கூறுவது சரியன்று.

ஆரியத்தில் ஸ்மிருதிகள் எங்ஙனம் தர்மத்தை வேதத்திலுள்ளபடி விளக்குகின்றனவோ, அங்ஙனமே, ஆர்யபாஷை தெரியாதவர்களுக்கும், வேதத்தி லதிகாரமில்லாதார்க்கும் பயன்படுமாறு, சுருதி ஸ்மிருதிகளின் அபிப்பிராயத்தைத் தமிழிற் குறளாசிரியர் செய்ததாகத் திருவள்ளுவமாலையிற் பல வித்வான்கள் பாடலால் நன்கு விளங்குகிறது. விரிப்பிற் பெருகுமாகையால் வெள்ளிவீதியார் மொழிந்த செய்யுளைச் சான்ருக வரைந்து இதை முடிப்பாம்.

"செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
இதற்குரிய ரல்லாதாரில்."

இதைப்பார்க்கிலும், நமது மதாசாரத்வேஷிகளான பாதிரிகள் அபிப்பிராயமும், தங்கள் நன்மையைத் தாங்கள் தெரிந்துகொள்ளாத நம் பிராமணர் சிலருடைய விபரீதக் கொள்கையும் உண்மையான சாக்ஷியமாகா.

M. K. நாராயண ரெட்டி,
மாளிகைமேடு, குமாரமங்கலம்.

சில ஐயவினு !

அடியிற்கண்ட ஐய வினக்களுக்கு (விடை) பொருள் விளக்கம் தமிழ்ப் புரான காவியங்களில் எனது சிற்றறிவிற்குப் புலப்படாமையாலும், இந்துமதப் பற்றுடையவர்கள் யாவரும் அவசியம் சந்தேகமறத் தெரிந்தொழுக வேண்டுவ தவசியமாகையாலும், புறமதத்தினர்களின் இகழ்ச்சிக்குத் தக்கவாறு நமக்கே (எம்போன்றவர்களுக்கே) விஷயம் இத்தன்மையதென்று கூட அறிந்துகொள்ளக் கூடாதிருப்பது கேவலமாகையாலும், தெரிந்தபெரியோர்கள் சாஸ்திர சம்மதமாகவும் கல்வி யொழுக்கங்களில் மிக்க ஆன்ரோர்களின் அனுபவ சம்மதமாகவும் உள்ள பொருள் விளக்கங்களை நமதானந்தன் மூலமாய்த் தெரிவிக்கக் கோருகிறேன்.

1. மார்கழி மாதத்தைச் சூனிய மாதமென்றும் பீடைமாதமென்னும் அதில் /சுபாசுப கிருத்தியங்களைத் தொடங்கலும் செய்தலும் கூடாவென விலக்குவதேன் ?

2. இம்மாதத்தில் மாத்திரம் பிரதிதினமும் பிராதகாலத்திற்கு முன்னமே ஒவ்வொரு ஊரிலும் சங்குநாதம் செய்வானேன் ?

3. வைஷ்ணவ சமயத்தார்களுக்கு விசேஷ மதிப்புள்ள வைகுண்ட ஏகாதசி விரதமும் சுவர்க்கவாயில் திறப்பும், சைவசமயத்தார்களின் பெருமதிப்புற்ற திருவாதிரை விரதமும், சிதம்பர தரிசனம் முதலியவைகளும் இம்மாதத்தில் ஏற்படுவதுடன், மற்ற மாதங்களைப்போலல்லாமல் பிரதிதினமும் இந்துக்கள் யாவரும் அவரவர்களின் வீடுகளையும் வீட்டு வாயில்களையும் மெழுகிக் கோலங்களால் அலங்கரித்துப் பூசனிப்பூவை மாத்திரம் வைப்பானேன்? மற்ற புஷ்பங்களை உபயோகிக்கக்கூடாதா ?

4. தினந்தோறும் பூஜாகைங்கரியங்கள் நடந்துவரும் எல்லாத்தேவாலயங்களுடன், பல மாதங்களாக மூடப்பட்டேயிருந்து சிலந்திப் பூச்சியின் வலையும் கலந்து பின்னப்படாமலிருக்கும் மற்றெல்லாக் கோவில்களிலுங்கூட இம்மாதத்தில் மாத்திரம் பிரதிதினமும் அதிகாலையில் பூஜாகைங்கரியங்கள் நடப்பதுடன் பஜனை கோஷ்டிகளும் பாகவதர்களும் சித்தசுத்தியுடனும் பக்தி ஸ்ரத்தையுடனும் தினம் ஊர்வலம் வருவானேன் ?

5. (a) இம்மாத முடிவில் ஏற்படும் 1. காப்புக்கட்டு, 2. போகிபண்டிகை, 3. சங்கராந்தி பண்டிகை, 4. வாசற் பொங்கல், 5. மாட்டுப்பொங்கல், 6. ஜல்லி மாட்டு பந்தயம் என்பவைகள் என்னென்ன காரணங்களால் என்னென்ன நோக்கங்களைக் குறித்துண்டாகியவை ?

(b) காப்புக்கட்டுக்கு வேப்பிலைக் கொத்தும், ஆவாரம்பூவின் கொத்தும், பூளைப்பூவும் மாத்திரம் வீட்டின் கூரைகளிலும் மற்ற இடங்களிலும் வைப்பானேன் ?

6. இரதசப்தமி என்றாலென்ன? அன்றையதினம் சில எருக்கந் தழைகளையும் இலந்தைப்பழங்களையும் மாத்திரம் வைத்து ஸ்நானஞ் செய்வதெதற்காக?

7. யுகாதிபண்டிகை என்ன காரணத்தாலுண்டானது? அன்றைய தினம் வேப்பங்கொழுந்தும், வெல்லமுங் கலந்துபுசிப்பானேன்?

8. ஆடி பண்டிகை என்ன காரணத்தாலேற்பட்டது? அன்றைய தினம் யாவரும் தேங்காய் சுடுவதின் நோக்கம் யாது?

9. பலவிதமாகிய தேக அசௌக்கியமுள்ள சிசுக்களுக்கும், பெரியோர்களுக்கும், சிலர் வைத்தியமுறையை அனுசரித்தோ, அல்லது மந்திர முறையை அனுசரித்தோ வேப்பிலைக்கொத்தாலும், வஸ்திரங்களின் மூலைகளாலும், குச்சிகளாலும் சாந்தி செய்கிறார்களே; மற்ற இலைகளாலும் வேறு வஸ்திரங்களாலும் சாந்தி செய்ய வழிகளுண்டா?

ப. சுப்ரமணிய பிள்ளை,
நஞ்சுண்டபுரம், காளப்பநாயக்கன்பட்டி போஸ்டு.

துறவு—யோகம்.

(426-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு மஹா மஹிமையுடன் விளங்குவதும், ஆரியரேயன்றி மற்றெவராலும் கண்டறியப்படாததும், ஆரியர்களுக்கே சிறந்த செல்வமாயுள்ளதுமான யோகத்தின் மகிமையை அளவிட்டுக் கூறுதலெவர்க்கு மிக வரிதே. இதனைச் சிறுவயது முதல் பழகிவந்த ஆரியர்களுக்கேயன்றி மற்றெவர்க்கும் இது சித்திப்பதுமரிது. மற்றவரால் சாதிக்கமுடியாததேயாம். இக்காலத்தவர் இதனை மறந்தேவிட்டார்கள். யாராவது சிலர் அப்பியாசம் செய்துவந்தாலும் முழுமையும் நிறைவேற்றி யதிற் சித்திபெற்றுப் பூர்வ மஹாத்மாக்களைப்போலப் பல கற்பங்களைக்கண்டு, மார்க்கண்டேயரைப்போல இளமை முதிராமலிருப்பது சாத்தியமாவதில்லை. ஆத்திசூடி அருளிச்செய்த ஔவையார் அம்மையவர்களே கணபதியின் அனுக்கிரகத்தாற் சித்திபெற்று முந்நூற்று நாற்பது வருஷகாலம் ஜீவித்திருந்து தேகத்தோடு கைலாசமேறினாரென்று பெரியோர் கூறக்கேட்டிருக்கிறோம். அதற்குப்பின் சிறந்த யோகிகள் கேட்கப்படவில்லை. காரணம் யாதோவெனில் உலகப் பொருள்களிலும், சிற்றின்பத்திலும் பிரியம் மாறாமையேயாம்.

இந்த யோகம் இருவகையாயுள்ளது. அவை ஆதாரயோகம் நிராதார யோகமென்பனவாம். யோகாப்பியாசம் செய்ய விரும்புகிறவர்கள் முதலில் ஆதார யோகத்தை யனுஷ்டித்துப் பயின்று அதிற் சித்திபெற்ற பிறகு நிராதார யோகத்தை யனுஷ்டிக்கவேண்டும். ஆதாரயோகத்தில் நிலைத்து நின்றால் அதுவே நிராதார யோகமாய்விடும். சென்றுபோன

பல பல ஜன்மங்களிற் புண்ணியம்புரிந்த மஹாத்மாக்களுக்கு நிராதார யோக மெளிதிற் கைகூடும். அவர்களுக்கு ஆதாரயோகம் அநாவசிய மாகும்.

"ஆதார யோக நிராதார யோகமென
மீதானத் தெய்தும் விதியிரண்டே—யாதாரத்
தாக்கும் பொருளாலே யாக்கும் பொருளாமொன்
றாக்காப் பொருளே யொன்றாம்."

ஆதாரயோகம் நிராதார யோகமென்னும் இரண்டும் மோட்சத்தை யளிக்கும் மார்க்கங்களாம். மூலாதாரம் முதலாகக் கூறப்பட்ட ஆறாதாரங் களிலும் ஆசிரியனால் உபதேசிக்கப்பட்ட திவ்யசொரூபத்தை நிறுத்தி மனதை யதனிடத்திலேயே நிலைத்திருக்கச் செய்து தியானிப்பது ஆதார யோகமாம். இந்த யோகம் சித்தித்தபிறகு அவ்வாதாரங்களிற் றரிசித்த பொருளைப் பாராமல் பார்த்துத் தியானித்துக்கொண்டிருப்பது நிராதார யோகமாம்.

"ஆக்கி யொருபொருளை யாதாரத் தப்பொருளை
நோக்கி யணுவி லணுநெகிழப் பார்க்கில்
இவனுகை தானெழிந்திட் டேகமா மேகத்
தவனுகை யாதார மாம்"

ஆதாரங்களில் கற்பிக்கப்பட்ட பொருளைத் தியானித்துச் சித்தி பெற்ற பின்னர் அப்பொருளைத் தனக்குள்ளே வைத்துச் சிந்திக்கில் தியா னிக்கிறே மென்கிற நினைவுமில்லாமல் போக அப்பொருளொன்றேயாம். இவ்வாறே தானும் சிவமும் வேறு காணப்படாம லேகமாய் நிற்பதே யாதாரயோகமாம்.

"கொண்ட தொருபொருளைக் கோடிபடக் கூறுசெயிற்
கொண்டவனு மப்பரிசே கூறுபடும்—கொண்ட
விருபொருளு மன்றியே யின்னதிது வென்னு
வொருபொருளே யாயிருக்கு முற்று."

இவ்வாறு தியானிக்கப்படும் பொருளை அணுவினும் நுண்ணிதாகப் பாவிக்க அது அவ்வாறே அணுவிலு மணுவாய் விளங்கும். அதற்குள் ளடங்கி நிற்கும் தானும் (ஜீவான்மாவும்) அவ்வாறேயாம். அவ்வாறாங் கால் இரண்டும் வேறற ஒன்றி யொருபொருளாகவே நிற்கும். இந்நிலை தான் தானே யதுவாய் அதுவே தானாய் நிற்கும் நிலையாமென்பர் கற்றறிந் தோர்.

இனி அகார உகார மகார விந்து நாதமானவை யொன்றுகூடியதும், பிரம் விஷ்ணு ருத்திர மகேச சதாசிவர்களை அதிதேவதைகளாகவுடைய தும், பிரணவ சொரூபமானது மாகிய பஞ்சாட்சரத்தைக் குருவின் மூல மாக வுபதேசம்பெற்று, மூலாதாரத்தில் அகாரத்தையும் பிரமாவையும், நாபி ஸ்தானத்தில் உகாரத்தையும் விஷ்ணுவையும், இருதய ஸ்தானத்தில்

மகாரத்தையும் உருத்திரனையும், கண்டத்தில் விந்துவையும் மஹேஸ்வரனையும், லலாடஸ்தானத்தில் நாதத்தையும் சதாசிவத்தையும் நிறுத்திச் சுழிமுனையில் குருவுபதேசப்படி இவ்வைந்தெழுத்தையும் பிரமரந்திரம் செல்லும்படி உச்சரித்தால் சொரூபமும் அக்ஷரமும் கரைந்து நாதவடிவாவன் ஆன்மா. பிறகு நாதாந்த தரிசனத்தால் ஆன்மபோதமும் கெடும். கெடில் பரமசிவன் வெளிப்பட்டுத் தன் சொரூபத்தோடு சேர்த்து அருள் புரிவார். இது முத்தியாம். இவ்வாறு ஆதார யோகத்தை ஸ்தூல சூக்ஷும, அதி சூக்ஷுமமாக வுபதேச முறையாலுணர்ந்து பயின்று சித்திபெற்றுக் கைவல்ய முத்திபெற்றோர் அநேகர். இதன்பிறகு நிராதாரயோகம் காணவேண்டும்.

"ஆக்கப் படாத பொருளா யனைத்தினிலும்
தாக்கித்தா னென்றோநீ தாக்காதே—நீக்கியுடன்
நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனாய்
நிற்கை நிராதார மாம்"

ஆன்மாவினால் கற்பிக்கப்படாததாயும் எல்லாப் பொருள்களினிடத்திலும் கலந்திருந்தும் அவற்றோடு சம்பந்தப்படாததாயும், முக்திக்கு விரோதமானவற்றை விலக்கி நிற்கும் பரம்பொருளோடு தற்போதமொழிந்து கூடி நிற்பது நிராதாரயோகமாம்.

"காண்கின்ற தோர்பொருளைக் காண்கின்ற யோகிகளே
காண்கின்றார் காட்சியறக் கண்ணுதலைக்—காண்கின்றார்
காண்பானும் காணப் படும்பொருளு மன்றியே
காண்கையினாற் கண்டனரே காண்."

"பேசாமை பெற்றதனிற் பேசாமை கண்டனரைப்
பேசாமை செய்யும் பெரும்பெருமான்—பேசாதே
யெண்ணென்றும் வண்ண மிருக்கின்ற யோகிகள்பா
லுண்ணின்று போகா னுளன்"

ஞானத்தையே கண்ணாகக்கொண்டு சிவத்தைக் காண்கிறவர்களே யோகிகளாவார். யாவற்றையும் தனக்கு வேறுபடாததாகக் காண்கிற ஞானமயமாகவிருந்து சிவத்தை நோக்குதலால் அந்த ஞானத்தையே தனக்குச் சொரூபமாகவுடைய பரம்பொருளை யுடனே யடைந்து, அதனோடு வேறற்று அபேதமாய் நிற்பார்கள். இந்த நிராதாரயோகம் நிலைபெறுதற்குப் பேசாமையாகிய மௌனயோகம் அவசியங் கொள்ளத்தக்கது. கொண்டால் அவ்வியோகம் சித்திக்கும். இவ்வாறு மௌனயோகம் பூண்டு ஞானத்திலே ஆன்மபோதமிழந்து நிலைபெற்று நிற்பதே நிராதார யோகமாம். ஈண்டுக் கூறிய ஸ்தூல சூட்சுமங்களாகிற ஆதாரயோகத்தையும், அதனைச் சாதிப்பதற்குபாயமாகக் கூறிய மந்திரயோகத்தையும், அதனாலடையப்படும் நிராதார யோகத்தையும், அதற்குபாயமாகக் கூறிய மௌன யோகத்தையும் நல்லாசிரியனை வழிபட்டுத் தெளிந்து அந்நெறி

தவறுமல் ஒழுகுப்பவரே யோகிகளென்று உலகத்தாரால் புகழப்படுவார். அவர்களே பலகோடிக் கற்பகாலங்களைக் கணப் பொழுதாகக் கண்டு கழித்துத் தாம் அழிவற்று நிற்பவராவர். இவர்களுக்குந் தெய்வத்துக்கும் பேதங் காணப்படுவதரிது. ஏனெனில் அவர்கள் பரம்பொருளோடு வேறறக்கலந்து ஒன்றி யவனே தானுய்த் தானே யவனுய்ப் பேதமறநிற்பதனுலென்க. பரம்பொருளில்லாத விடமொன்றுமில்லையாயினும் இத்தகைய யோகியர்பால் விசேஷமாய்ப் பிரகாசித்து நிற்பன். அந்த யோகிகளுக்குச் செய்யும் வழிபாடுகளெல்லாம் சிவ வழிபாடேயாம். இதனுலேயே யோகிகளை வழிபட்டுப் பலர் மகத்தான ஐசுவரியத்தையும், ஒருவருக்கு மெட்டாத மேலான பதவியையும் பெற்றுர்களென்று எல்லா நூல்களுங் கூறுகின்றன. யோகத்தை யித்துடன் முடித்து எஞ்சிநின்ற மெய்த்துறவு (சந்நியாசம்) என்பதைச் சிறிது விரிப்பாம். (தொடரும்)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

யோக முற்றும்.

உப்பு.

நமது ஆனந்தனின் நண்பர்கள் யாவரும் உப்பையும் அதன் உற்பத்தியையு மறிந்திருந்தாலும், அதிலோர் விசேஷித்த தன்மை அமைந்திருப்பதால் என் சிற்றறிவிற்கெட்டியவாறு இவ்வியாசத்தை யெழுதத் துணிந்துளேன்.

இவ்வுலகின்கண்ணே தோன்றும் விளை பொருட்களுள் உப்பு மொன்று. இது மூன்றெழுத்தாலாகிய ஓர் பெயர்ச்சொல். கடல்நீரில் ஆதித்த கிரணங்கள் தாக்குவதனுல் அதிலுள்ள அணுக்கள் யாவுமொன்றுய்ச் சேர்ந்து கட்டியாக மாறுவதினுலே உப்பு உண்டாகிறது. ஜனங்கள் கடல்நீரைப் பாத்திகட்டி மறித்து சூரியகிரணத்தினுதவியினுல் உப்பைச் செய்கை பண்ணுகிறுர்கள். சில இடங்களிற் தானுகவே விளைவதுமுண்டு.

இவன் ஓர் எளிமையான இடத்தில் உற்பத்தியானுலும் சமஸ்தகோடி ஜனங்களுக்கும் ஓர் நண்பன்போலத் தோன்றுகிறுன். இவன் உலகிலுள்ள யாவருக்கும் ஞான உபதேசம் செய்யும் ஓர் மௌனகுருபோலவும், தன்னை அண்டினேரைக் காக்கும் மண்டலாதிபனை ஒப்பவும், சகல சீவான்மாக்களுக்கும் ஓர் பரோபகாரியாகவு மிருக்கிறுன். இவனுடைய மேன்மையை உற்றுணர்ந்த வோர் ஞானி, மனிதரின் உன்னத நிலையை யெடுத்துப் பேசுமிடத்து, தன்னைச் சூழ்ந்திருந்த ஜனங்களையும், தமது சீஷப்பிள்ளைகளையும் பார்த்து, "நீங்கள் உலகத்திற்கு உப்பா யிருக்கிறீர்கள்" என்று கூறினர். அறுசுவைகளுளொன்றுகிய வுவர்ப்புச் சுவையைக் கொடுப்பது இவ்வுப்பே. நமதுணவுடன் இனிப்புப்புளிப்பாகிய எந்த விதமான சுவையைச் சேர்த்தாலும், உவர்ப்பாகிய சுவையில்லாவிட்டால்

அது நாவிற்கு உருசியைத் தராது. "உப்பில்லாப்பண்டத்தைக் குப்பையிலேபோடு" என்ற பழமொழி இதனாலேயே வழங்கப்பட்டு வருகிறது. அறுசுவைப் பதார்த்தங்களுள் உப்பு சிரேஷ்டமா யிருப்பதுபோலவே, மனுஷனும் கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்ட எழுவகைச் சிருஷ்டிகளுள் அதி சிரேஷ்டமுடையவனா யிருக்கிறான். உப்பானது சாரமற்றுப் போனா லொன்றிற்குமுதவாது. அப்படியே மனுஷனும். ஐம்புலவலையிலகப்பட்டுச் சத்து அற்றுப்போகும்போது தனக்கும் பிறருக்கும் அப்பிரயோசனமுடையவனாகிறான். உப்பே உணவிற்கு உருசியைக் கொடுக்கிறது; அதுபோலவே மனுஷனும் உலகத்திற்கு உப்பைப்போலவிருக்கிறான். உலகத்தைச் சிறப்பித்து வருகிறவன் மனுஷனே. உலகத்திற் றற்போது காணப்படும், நாகரீகம், சீர்திருத்தம் யாவும், மனுஷனது முயற்சியே.

உப்பிலே விசேஷித்த இரண்டு குணங்களுண்டு. ஒன்று தானழிந்தாலும் தன் சுவை கெடாமலிருப்பது. மற்றது தானழிந்து மற்றவர்களுக்குப் பிரயோசனப்படுவது. இவ்விரு இலட்சணங்களுமே உப்பின் மேன்மைக்குக் காரணங்களாயிருக்கின்றன. ஒரு கட்டி உப்பைத் தண்ணீரில் போடும்போது அதன் உருக்குலைந்து தண்ணீர் மயமாகிறது. ஒரு பதங் கெடத்தக்க வஸ்துவின்மேல் உப்பைப்போட்டு வைத்தால், அது பதங்கெடாதபடி காக்கப்படுகிறது. "தன்னைத்தான் தியாகஞ் செய்தல்" (Self sacrifice) என்னும் சிறந்த லட்சணத்தை மற்ற எந்தவஸ்துவிலும் பார்க்க உப்பிலேயே நாம் தெளிவாய்க் கற்றுக்கொள்ளலாம். சுயமதிப்பிழந்திருக்கும் இந்தியராகிய நாம் கற்றுக் கொள்ளவேண்டிய சிறந்த இலட்சணம் உப்பிடத்திலேயே யிருக்கிறது. ஒருவன் உலகில் மேலான நிலையை யடையவேண்டுமானால் "தன்னைத்தான் தத்தம் செய்தல்" (Self Sacrifice) என்னும் சிறந்த இலட்சணத்தைப் பொருந்தினவனாயிருத்தல் அவசியம். "மகான்" என்னும் பெயரைக் காந்தியடிகள் இதன் மூலமாகவே யடைந்துகொண்டார். இந்தியா சுயராஜ்யம் பெறவேண்டுமானால், யாவரும் இச்சிறந்த குணத்தைத் தங்களில் விருத்தியாக்கிக்கொள்ள வேண்டுமென்பதே அம்மகானின் போதனையும் சாதனையுமாகும். அமெரிக்காவிலுள்ள அடிமைகள் சுயாதீனமடைவதற்கு இச்சிறந்த இலட்சணத்தை ஆபரணமாகவுடைய ஆபிரகாம் லிங்கன் (Abraham Lincoln) முதலிய மகான்களே காலாயிருந்தனர். முன் தோன்றிய ஞானிகளிலொருவராகிய இயேசுகிருஸ்து, "ஒருவன் முதல்வனாயிருக்க விரும்பினால், அவன் மற்றவர்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" என்று கூறியது வாஸ்தவமே. ஒரு வித்து முளைத்து மரமாகவேண்டுமானால் அது முதலாவது நிலத்திற் சாகவேண்டும். சாகாவிட்டால் அது தன்னில்தானே பிரயோசனமற்றதாயிருக்கும். தன்னுருக்கெடும்பொழுது ஒரு அழகான பூண்டைப் பிறப்பிக்கிறது. அப்படியே ஒரு இரும்புத்துண்டைக் கொல்லனுலையிலிடும்போது, அதனுருக்குலைகிறது. அதன்மூலம் பிரயோசனமான பல ஆயுதங்கள் அடிக்கப்படுகின்

றன. அவ்வாறே சகல காரியங்களுக்கும் "தன்னைத்தான் தியாகஞ்செய்தல்" என்னும் குணம் ஓர் ஊற்றுயிருக்கிறது.

"தன்னைத் தான் தியாகஞ் செய்தல்" என்ற நதி தனக்கிஷ்டமான இடத்திலோடி தன்னைச் சுற்றியுள்ள புல், பூண்டு, விருட்சம் முதலியவற்றைச் செழிப்பியாதபடி, சுயநயம் (Selfishness) என்னும் வரம்பு அதைத் தடுத்துக்கொண்டிருக்கிறது. இச்சுயநயம் மனுஷனுடைய தீய குணங்களுக்கு ஓர் ஊற்றும் காரணமுமாயிருக்கிறது.பெருமை,பொருமை,கோபம், பிரிவினை முதலிய தீக்குணங்கள் இக்கசப்பான ஊற்றிலிருந்தே உற்பத்தியாகின்றன. இதுவே எல்லாத் தீங்குக்கும் வேர். இந்தியாவிற் காணப்படுக் ஜாதிபேதம், மதபேதம், முதலிய பேதங்கள் இதன் பிள்ளைகளே. இக்குணம் சகலமனுஷரிடத்திலுமிருக்கிறது. "தன்னைத்தான் தியாகம் செய்தல்" என்ற ஆறு சுயநயம் என்னும் வரம்பை புடைத்துப் பாயவேண்டுமானல் அன்பு (Love) என்னும் பேராறு இதனுடன் வந்து கலக்கவேண்டும். அன்பே மனுஷனை உலகத்திற்கு உப்பைப்போற் சீவிக்கப்பண்ணும். சாரமுள்ள உப்பே மனுஷனுக்குப் பிரயோசனப்படும். அப்படியே அன்பினல் சாரமேற்றப்பட்ட மனுஷனே உலகத்திற்குப் பிரயோசனமுடையவனுயிருப்பான். திருக்குறளில் அன்பின் சிறப்பைக் குறித்துப் பேசுமிடத்து

"அன்பிலாரெல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு"

என்று "தன்னைத் தான் தியாகஞ் செய்தல்"என்னும் சுபாபத்திற்கு அன்பு எவ்வளவு இன்றியமையாதது என்பதை யெடுத்துக் காட்டியுள்ளார்.

ஒருவருக் கிடுக்கண்வருங்கால் அதனைக் கண்ணுற்று மனமகிழ்ந்து விலகி ஓடாமல், அவர்களிடஞ் சென்று போதிய வுதவிசெய்தல்வேண்டும். தன்னை நேசிக்குமாப்போல் பிறரை நேசித்து தன்னுயிரைப்போல் மன்னுயிரைக் காத்து நடப்பவனே மானிடஜென்மமெடுத்ததின் பயனையடைவான். எவனொருவனுக்குச் சீவகாருண்யமுண்டோ அவனே உப்பைப்போல் கரைந்து மற்றவர்களுக்குப் பிரயோசனப்படுவான்.

பாரதமாதாவின் புத்திர புத்திரிகளே! அன்பெனும் சிறந்த லட்சணத்தை நாம் பெற்று உப்பைப்போல நாம் உலகத்திற் சீவிக்கவேண்டுமாயின், அன்புச் சொருபியாகிய கடவுளோடு ஐக்கியப்பட்டுச் சீவிக்கவேண்டும். ஆகையால் நாம் உலகிற் பிரயோசனப்படுமாறு சீவித்து பரந்தாமனின் பாதகமலங்களை யடையவேண்டுமாயின் உப்பின் விசேஷத் தன்மைகளைக் கவனித்து நடக்கவேண்டியவர்களாயிருக்கிறேம். அவ்வண்ணம் நடக்கக் கருணையங் கடல் கருணை புரிவாராக.

வே. பொன்னையா,
பட்டணம், யாழ்ப்பாணம்.

பகவத்கீதை வசனம்.

(433-ம் பக்கத் தொடர்ச்சி.)

இத்தகைய நிலையில் நிற்கும் யோகிகள், கொடிய பகைவர் தம்மை வேல் முதலிய ஆயுதங்களால் துன்புறுத்தினும், தீக்ஷணியமான் நஞ்சையுடைய கொடிய நாகம் தீண்டினும் எதற்கும் அஞ்சமாட்டார்கள். சர்வ விருத்திகளுமொழிந்த அச்சமாதியின்கண்ணே அவர்களடைந்துள்ள நிலை நிரதிசயானந்தமேயாகும். அந்த நிலையில் அவர்களுக்கு யாவும் பிரம்மானந்தமயமே.

அத்தகைய யோகம் எவ்வித உபாயத்தால் அப்பியாசிக்கத்தக்கது? என்று அர்ச்சுனன் வினவ, நீலமேக சொரூபியாகிய கிருஷ்ணபகவான் அவ்வுபாயத்தை யருளிச்செய்கின்றார் :—

ஏ அர்ச்சுன! சங்கற்பத்தினுல் எழாநின்ற சர்வ காமங்களையும் அவற்றின் வாசனைகளோடு கூட பரித்தியாகம் செய்து, இந்திரியங்களை விஷயங்களில் செல்லவொட்டாது தடுத்து, மனதை யப்புறம் போகவொட்டாமல் பிரத்யகான்மாவினிடத்தில் நிலைக்கச் செய்வாய்.

நேத்திராதி யிந்திரியவாயிலாய்ப் புறம்போந்து நாமரூப விஷயங்களில் சஞ்சரிக்கும் மனதை உபாயமாய் அந்தர்முகத்திலிழுத்து, கேவலமாகிய நித்திரையடையாதபடி பிரத்யகாத்மாவின்கண் நிலைக்கச்செய்து, சித்தம் சற்றும் சலிக்காது வைக்கும் அப்பியாசத்தையே செய்வாயாக.

[மனம் இந்திரியவாயிலாகப் புறம்போந்து நாமரூபங்களாகிய விஷயங்களைப் பற்றுவதும், நாமரூபமான அனுன்ம பதார்த்தங்களைச் சிந்திப்பதுமாகிய இவை சகலம் என்னப்படும். மனதைச் சகலாவஸ்தையடையாதபடி தடுத்து இலயப்படுத்தும்போது தன் நிலைமறந்து சுழுத்தி மூடிக்கொள்ளுதல் கேவலம். இந்தச் சகல கேவலங்களிரண்டும் ஞானயோகம் கைகூடற்கு விக்கினங்களாமாதலின் சகல கேவலங்கள் தாக்காதபடி மனம் பிரத்யகான்மாவில் இலயிக்கச் செய்யவேண்டும். அப்போது தான் ஆன்ம தரிசனம் கிட்டும். இச்சகல கேவலங்களையே முறையே பகல் இரவென்று, நினைப்பு மறப்பென்றும் நூல்கள் கூறும். ஆதலின் சகலகேவலங்களற்ற நிலையை, நினைப்பு மறப்பற்ற விடமென்றும், இராப்பகலற்ற விடமென்றும் கூறுப.

இவ்வாறு மனதை யிந்திரியங்களின் வழிச் செல்லாது தடுத்து சகல கேவலங்களற்ற நிலையில் நிறுத்தினுல்தான் அருள் கிட்டும் என்பதை ஸ்ரீ அருணகிரிநாதர் பின்வருமாறு அருளியிருக்கிறார் :—

"அராப்புனை வேணியன் சேயருள் வேண்டு மவிழ்ந்த வன்பாற்
குராப்புனை தண்டையந் தாடொழல் வேண்டுங் கொடிய வைவர்
பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பற வேண்டு மென்று
மிராப்பக லற்ற விடத்தே யிருக்கை யெளிதல்லவே.

(கந்தரலங்காரம்.)

மறவா நினையா மௌனத் திருக்கிற்
பிறவா ரிறவார் பினை. (ஔவைக்குறள்.)

இந்த நிலையில் சித்தம் சற்றும் சலனமின்றி சாக்கிரத்தில்மட்டும் அதாவது தன்னிலையை மறவாதுமட்டு மிருக்கவேண்டும். சலித்தலாவது சிந்தித்தல்—சமாதி நிலையின் சுகத்தை எதிரிட்டு நோக்குதல், இப்போது நாம் எவ்வளவுகாலமாகச் சமாதிநிலையிலிருக்கிறோம் என்று நினைத்தல் முதலியவைகளாம்—இத்தோஷங்களால் சகலம் தோன்றி நிஷ்டைகெடும்—சகலம் உண்டாகாவிடினும், மனதையிரண்டிலும் செல்லவொட்டாது தடுத்தும் சித்தம் அந்நிலையை யெதிரிட்டுணர்ந்துகொண்டிருக்கின், சித்தம் நடுநிலையில் நிற்குமன்றி ஆன்ம சாக்ஷாத்காரமடையாது. ஆதலின் சித்தம் சலனமற்று நிற்றல்வேண்டும். சித்தம் இவ்வாறு நிற்கும் நிலையே தானற்ற நிலை.

"நீயற்ற வந்நிலையே நிட்டையதி னீயிலையோ
வாயற் றவனே மயங்காதே—போயற்
றிருந்தாலு நீபோகா யென்றுமுள்ளாய் சும்மா
வருந்தாதே யின்பமுண்டு வா." (தாயுமானவர்.)]

(பகவான் இத்தகைய யோகி யடையும் ஆனந்தத்தைப்பற்றிக் கூறுகின்றார்.)

ஏ பார்த்த! சகல கேவலங்களற்ற தெளிந்த சித்தத்தையுடையவனாய் தன்னிலையன்றி வேறு கற்பிதமற்றவனாய் இத்தேகத்திலிருந்தே இதற்கு விலக்ஷணமான பிரமத்தையடைந்து ஆரூடனாய் நிற்கும் சீவன் முத்தன் நிரதிசயானந்தத்தையடைவன்.

இந்த யோகத்தில் எப்போதும் நிலைத்து நிற்பவன் என்று மழியாத இன்பத்தினை அநாயாசமாகவே யநுபவியாநிற்பன். அத்தகையோன் சர்வ பூதங்களையும் தன் ஆன்மாவினிடத்தும், சர்வபூதங்களிலும் தன் ஆன்மாவையும் காண்பான். (அதாவது தானாகிய ஆன்மா யாவற்றிலும் வியாபித்திருப்பதாகவும், சகலமும் ஆன்மாவிலிருப்பதாகவும் அபேதமாய்க் காண்பான். யாவும் தானாகவும் தன்னையன்றி இரண்டாவதொன்றில்லை யென்றும் காண்பான்.)

முன்பு, தேவர்களின் பகைவர்களாகிய அசுரர்களைச் சங்கரித்த கிரீடி! எந்த யோகி புருஷன் சர்வ வுலகங்களிலும் பரமேசுரனை என்னையும், என்னில் எல்லா வுலகங்களையும் அபேதமாகக் காண்கின்றானோ அவனுக்கு நான் அன்னியமன்று ; அவனும் எனக்கன்னியமன்று.

எந்த யோகி புருடன் சர்வ பூதங்களிலு முள்ள தத்பத இலக்ஷியார்த்தமாகிய என்னைத் துவம்பத இலக்ஷியார்த்தமாகிய தன்னோடு அபேதமென நிச்சயித்து அனுபவிக்கிறானோ, அந்த யோகி புருடன் எத்தகைய விவகாரங்களைச் செய்யினும் நான் அவனாகின்றேன் என்று ஐயமற அறிவாயாக. (இது சாமவேதம் சாந்தோக்கிய உபநிடத மகாவாக்கியமாகிய "தத்துவமசி" என்பதன் பொருளாகும்.)

ஏ பார்த்த! எந்த யோகிபுருடன் அந்நிய உயிர்களின் சுகதுக்கங்களைத் தான் அனுபவிப்பதுபோல் சமமாய்ப் பார்க்கின்றானோ அந்த யோகி மேலானவனாகும்.

[இதுவே சீவகாருண்யம் என்பதன் பூரண அர்த்தம். எவ்வகைச் சன்மமெடுத்தபோதிலும் அததற்கு அததன் ஜீவன்மேல் மிகப் பிரியமே. மனிதன் கழுதையை மிக அலக்ஷியமான பிராணியெனக் கருதுகிறான்.

உண்மையில் மனிதனுக்குத் தன் உயிர் எவ்வளவு இனிமையாய்த் தோன்றுகிறதோ, அதுபோலவே கழுதைக்கும் அதன் உயிர் அவ்வளவு இனிமையாகவே தோன்றும். இது மாயையின் இரகசியங்களிலொன்றாகிய இயற்கையாகும். ஆதலின் எல்லா உயிர்களையும் நம்முயிரெனவே கருதல் வேண்டும் என்பது விதி.

"எவ்வுயிர்த் திரளு முலகி லென்னுயி
ரெனக்கு ழைந்துருகி நன்மையாய்
* * * *" என்றும்,

"எவ்வுயிருந் தன்னுயிர்போ லெண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ"
என்றும் தாயுமான சுவாமிகள் கூறியருளினர்.]

(மனதின் சஞ்சல சுபாவத்தால் எல்லா உயிர்களையும் சமமாகப் பார்க்கத் தன்னால் இயலாமையைப்பற்றிப் பார்த்தன் வினவுகிறான்.)

அர்ச்சுனன் :—"ஏ பரந்தாமா! யோகி புருஷன் எல்லா வுயிர்களையும் சமமாகப் பார்க்கவேண்டுமென வருளினீர். ஆனால் இம்மனமானது மிகச் சஞ்சல சுபாவமுடையதாய் சரீரேந்திரியங்களைக் கலங்கச் செய்துவிடுகின்றது. பலம்பொருந்தி இம்மனத்தை க்ஷணநேரமேனும் ஒரு நிலையில் நிறுத்துவது முடியாத காரியமெனத் தோன்றுகிறது. ஏனெனில் இம்மனதை நிறுத்துதல் வாயுவை நிறுத்துதலுக்குச் சமானமாகுமெனக் கருதுகிறேன்" என்றனன். (தொடரும்)

சீடன்.

கருதாமற் கருமங்கள் முடிக்கவேண்டாம்.

இப்பூவுலகின் கண் மாந்தர் செய்யத்தக்க காரியங்கள் பல உள. அவைகளை இடம், பொருள், ஏவல், காலம் முதலியவற்றை நன்றாயறிந்து செயல்வேண்டும். ஒரு தொழிலைப் புதிதாய் ஆரம்பிக்கும் முன்னம் அதைத் தீர்க்கமாய் ஒருமுறைக் கிருமுறை,அல்லது அநேக முறை யோசித்துப் பிறகு செய்யத் துணிதல்வேண்டும். துணிந்து செய்துவிட்டுப் பிறகு அதனுடைய நற்பயனோ துர்ப்பயனோ பார்த்துக்கொள்ளலாம் என்று முன்பின் யோசியாமல் செய்துவிட்டுப் பிறகு கஷ்டப்பட்டு, நான்குபேர் சிரிக்க உடலெடுப்பதா மனித வாழ்வு! ஒரு காரியத்தில் புகுந்தால் கட்டாயமாய் அநேக இடையூறுகள் தோன்றும். அவற்றையெல்லாம் கடந்து, தான் கொண்ட முடிவிற்கே வந்து நிலைப்படுத்தவேண்டும்; ஆடம்பரமாக ஆரம்பித்து இரண்டு நாட்களில் இருந்த இடம் தெரியாமல் போய் விடுவதைப் பார்க்கிலும் "தோன்றலிற் தோன்றாமைநன்று" அன்றோ! பாமரர் இதைத் தெரிந்துகொள்ளாதிருப்பதைப்பற்றி நமக்கு வருத்தமில்லை. ஐயோ! கற்றறிந்த சிகாமணிகள்கூட, தெரிந்தோ அல்லது வேண்டுமென்றோ.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"
என்ற நாயனார் அமுதவாக்கினை அலட்சியப்படுத்துகிறதற்கே வருந்துகிறோம்.

ஆனந்த நேயச் செல்வர்காள்! இப்பொழுது நாம் இதை வரையாது காரணமெனின், சென்ற வைகாசிமீ ஆனந்தனில் சந்தா நேயர்களில் பிரக்கியாதிபெற்ற ஒருவரால் "நுண்ணிய கருமமு மெண்ணித்துணி" என்ற தலைப்பின்கீழ் வரையப்பட்டதை நேயர்களனைவரும் கண்ணுற்

திருப்பீர்கள். அதைப்போலவே இத்தென்னாட்டின்கண் இன்னுமொன்று நிகழ்ந்தவாறு மொழிவாம்.

நண்பர் சொல்லிய 'தமிழபிமானி'யின் மானேஜர் எம்மிடத்தில் எம்மாதிரி நடந்துகொண்டார் என்பதை ஒரு வார்த்தையில் சொல்லி விட்டு, மேலே யாம் இன்னொருவரால் அடைந்த கஷ்டத்தையும் நம் ஆனந்தன் வாயிலாக வெளியிட்டு ஆற்றிக்கொள்கிறேன்.

என் விலாசத்தையும் பெயரையும் 'தமிழபிமானி'யின் மானேஜர் பெயர் பெற்ற ஆனந்தனின் மூலமாகத்தான் தெரிந்திருப்பாரென்று உறுதியாகச் சொல்வேன். அன்னவர் அம்பாசமுத்திரத்தினின்று 19-12-20ல் ஓர் கடிதம் எழுதினார். அதில் சிறியேனை விஷயதானம் புரியவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதற்கிணங்கி ஏதோ என் சிற்றறிவிற்கெட்டியவாறு ஓர் வியாசமும் ஓர் பதில் கடிதமும் எழுதியனுப்பினேன். பிறகு மாதிரி சஞ்சிகை யொன்றனுப்பினார். அதோடு முற்றுப்பெற்றது. அவர் என்னைச் சந்தாதாரர்களைச் சேர்க்கச்சொல்லவுமில்லை; ஆகையால் யானும் செய்யவுமில்லை.

அம்பா சமுத்திரத்திற்கும், மணற்பாறைக்கும் எவ்வளவு தூரமோ யான் அறிகிலேன். ஏனெனில் இக்காற்று அங்கேயும் அடித்ததுபோலும் 29-7-'21ல் "ரஞ்சிதம்" பத்திரிகாசிரியரும், மானேஜருமான ம-ா-ா-ஸ்ரீ K. N. நாராயணசாமி பிள்ளை என்பவர் என் விலாசத்திற்கு ஓர் கடிதம் அனுப்பினார். அதில் 15-8-1921 முதல் 'ரஞ்சிதம்' என்ற ஓர் மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை வெளியிடப்போவதாயும், அதில் அருமையான விஷயங்கள், பல பண்டிதர்களால் வெளியிடப்போவதாயும், அதற்கு வருட சந்தா ரூ. 1—8—0 ஆகவும், அதற்கு நான் ஒரு சந்தாதாரராய்ச் சேரவும், என்னையாவது, அல்லது வேறொருவரையாவது அப்பத்திரிக்கைக்கு மதராசில் ஏஜெண்டாயிருக்கவேண்டியும், உடனே பதில் எழுதினால், 20 ஆர்டர் கொண்ட புஸ்தகம் ஒன்றும், நோடீசும் அனுப்புவதாயும் பிறகு ரூ. 5 கமிஷன் எடுத்துக்கொண்டு வசூலித்த பணத்தை அனுப்பும்படியும், அதோடு வியாசம் ஒன்றெழுதியனுப்பும்படியும் கேட்டுக்கொண்டார். அதற்கு நான் உபசார பதில் எழுதினேன். அவர் 16-8-'21ல் "தாங்கள் வரைந்த லிகிதமும் "செயல்" என்னும் வியாசமும் வந்து சேர்ந்தன. அதைப் பிரசுரிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். மதராஸில் தங்களைத் தவிர சந்தாநேயராவது ஏஜெண்டாவது கிடையாது. ஆகையால் இத்துடன் தங்கள் பேருக்கு 20 ஆர்டர் கொண்ட மனுப்புஸ்தகம் இரண்டும் நோடீசும் அனுப்பியிருக்கிறேன். தாங்களே அவைகளைப் பூர்த்தி செய்தாவது அல்லது யாரையாவது ஏஜெண்டாக நியமனம் செய்தாவது ரூ. 10 கமிஷன் எடுத்துக்கொண்டு பாக்கியையும் பூர்த்தியான புஸ்தகத்தையும் அனுப்பிவைக்கவும். தங்களை ஏஜெண்டாய் எடுத்துக்கொண்டதால் முதலாவது சஞ்சிகையிலிருந்து தங்களை ஏஜெண்டென்று பிரசித்தம் செய்யப்படும்." என்று வரைந்தார்.

நேயர்களே! தமிழ்ப் பாஷை என்பது இந்நாட்டில் இன்னும் உயிரோடு உலாவி வருகின்றதா என்று அதிசயப்பட்டுக்கொண்டிருக்கும் தருணம் "ஆம்" என்று பதில் சொல்வதுபோல் நம் ஆனந்தன் உலாவி வருகிறான். இதைப்போலவே, தமிழபிமானி, ரஞ்சிதம் முதலான பத்திரிகைகள் வெளிவர முயன்றால், அவைகளுக்கு நம்மாலியன்றவளவு உதவிபுரிய வேண்டாமா? அதனால் உண்டோ இல்லையோ என்ற தமிழிற்கும் நம் பாரதமாதாவிற்கும் அற்ப நன்றி செலுத்தினவர்களாக மாட்டோமா?

உலகிலிருக்கும் அறிவாளிகளையும், செல்வவந்தர்களையும் விட்டுவிட்டு எம்மைப்போன்ற எளியோனையும் ஓர் பொருட்படுத்தி பத்திரிகாசிரியர் "தாங்கள் நமது சஞ்சிகைக்கு உதவி புரியவேண்டும்" என்று கேட்டுக் கொண்டால் அதற்குப் பின் வாங்குவதா? நாம் என்னகொடுத்து விடப் போகிறோம்; பணமா, காசா? சொற்ப தேக கஷ்டமும் பேனா ஓட்டும் வேலைதானே! உன்னத நிலையை யடைந்திருக்கும் பாஷைக்கு நாம் செய்ய வேண்டியவை யொன்றுமில்லை. செய்ய இயலும் இயலா — அந்தோ நம் தாய்ப்பாஷை க்ஷீணதிசை அடைந்து கொண்டிருக்குஞ் சமயம் இச்சிறிய உபகாரமாவது செய்ய நம்மைக் கடவுள் குறிப்பிட்டாரே என்று சந்தோஷங்கொண்டேன்.

மறுதபாலில் நோட்டீசுகளும், ஆர்டர்பாரங்களும் வந்துசேர்ந்தன. வேறொன்றுஞ் சொல்லவேண்டியதில்லை. என்னால் செய்யவேண்டியவை செய்தேன். கமிஷன் பற்றித் தொந்தரவு எடுத்துக்கொள்ளவேண்டா மென்று பதிலளித்து சந்தாக்களைச் சேர்த்தனுப்பினேன்.

அக்டோபர்மீ சஞ்சிகைகளை நவம்பர்மீ அனுப்பிவைத்தார். அவைகளை சந்தாதாரர்களுக்கு நானே முறைப்படி நேரில் கொண்டுபோய்க் கொடுத்து, பத்திராதிபருக்கு, அடுத்த சஞ்சிகையிலிருந்து அவரவர்களுடைய விலாசத்திற்கு அனுப்பும்படி எழுதிவிட்டேன். இவ்வளவுதான் அதன் விவகாரம். அன்றுமுதல் இன்றையவரையிலும் ஒரு சஞ்சிகையும் வரவில்லை. யாம் எழுதிய கடிதங்கள் ஒன்றிற்காவது பதிலுமில்லை. சந்தாதாரர்கள் நம்மை நெருக்கினார்கள். நாம் ஒன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது. நல்லது செய்யப்போய்க் கெட்டதுவந்து நேர்ந்தது. யாரை நோவது? கடைசியில் என் கையினின்று கொடுக்கவேண்டியதாயிற்று. நேயர்களே! சஞ்சிகையை நிறுத்திவிட்டால் வசூலித்தபணத்தைத் திருப்பி அனுப்பிவிடவேண்டுமென்பது பத்திராதிபருக்குத் தெரியாததல்ல. ஆனால் அவர் என்ன எண்ணமோ? கடலாழத்தைக் காணலாகும், நெஞ்சாழத்தைக் மனதில் காண வியலுமோ!

இவ்விதம் நம்பி மோசம் போனவர்களில் நான் ஒருவன்தான் என்று இதுகாறும் சும்மாவிருந்தேன். எம்மைப்போலவே நமது நண்பரும் அடைந்த நஷ்டத்திற்காக எம்மைவிட அவருக்காக வருத்தப்படுகிறேன். தமிழிற்கு உறைவிடமான தென்தேசத்தில் இவ்வாறு தமிழின் பெயரைச் சொல்லிப் பிழைக்கிறார்களே என்பதுதான் ஆச்சரியப்படத்தக்க விஷயம்.

நேயர்களே! "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்—தோன்றலின் றோன்றாமை நன்று"—என்றவாறு ஆனந்தனின் தக்க புகழைப்பற்றி யான் எடுத்துரைக்கவல்லேனல்லேன். ஆனால் ஆனந்தன் எதற்கும் இரண்டாவதல்ல என்பதை மாத்திரம் தீர்க்கமாய்ச் சொல்வேன். இனி எந்த நாட்டுச் சஞ்சிகையின் விஷயத்திலும் நுழைவதில்லை. உழைத்தால் இனி ஆனந்தனுக்கேதான் உழைப்பது என்று முடிவு செய்துகொண்டேன். இன்று முதல்வருடா வருடம் ஒருசந்தாவையேனும் கட்டாயம் சேர்க்காமல் விடுவதில்லையென்று கங்கணங் கட்டிக்கொண்டேன். நீங்களும் அதே மாதிரி செய்வீர்களென்று மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். சஞ்சிகையின் அபிவிருத்தியும், பரவலுமே தேசபிரபல விருத்திக்குக் காரணம். நாம் செய்யக்கூடிய தொண்டு இச்சிறிய தொண்டேயாம்.

மாதம் ஒருமுறை வரும் ஆனந்தனை இருமுறை வெளிவர எல்லோரும் முயற்சி செய்யவேண்டும். பத்திராதிபர் சந்தாவை இரட்டிப்புச் செய்யக்

கோருகிறோம். இதைப்பற்றி நாம் முன்னமேயே பத்திராதிபரை வேண்டிக்கொண்டோம். வேறொரு தென்னாட்டுச் சஞ்சிகை ஜோலி இனி நமக்கு வேண்டாம்.

பரிவா யெனக்குநீ யறிவிக்க வந்ததே
பரிபாக கால மலவோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற
நிறைகின்ற பரிபூர ணனந்தமே.

பூ. அமிர்தலிங்கம்,
2/112 தம்புசெட்டி தெரு, மதராஸ்.

குறிப்பு :—நமது நண்பர் நன்மைசெய்யப்போய் வருத்தமடைய நேர்ந்ததற்காக மிகவும் விசனிக்கிறோம்.

நமது நண்பர் ஆனந்தனை மாதமிருமுறையாக்க விரும்புகிறார். இவ்வாறு பத்திரிகைகளின் அருமையையும், பயனையும் அறிந்து அவற்றை ஆதரிக்க விரும்பும் அறிவாளிகளாகிய அபிமானிகள் மிகச் சிலரேயுளர். நம்மவர் நாடகம், பயாஸ்கோப், வேடிக்கை இவைகளுக்கு வாரம் ரூபா 1, 2, 3 கூடச் செலவு செய்வார்கள். இத்தகைய தேச க்ஷேமத்தையும் தாய்ப் பாஷாபி விர்த்தியையும் பொறுத்த விஷயத்திற்கு வருடத்திற்கொரு முறை 2 ரூபா கொடுத்து நன்மைபெறப் பிரியமற்றவர்களாக விருக்கிறார்கள்.

நம் சந்தாநேயர்களில் பாதிப்பேர்—பத்தாயிரம்பேர்—மட்டுமேனும் வருடசந்தா ரூ. 1-8-0 ஆகக் கட்டச் சம்மதித்தால் நாம் உடனே மாதம் இருமுறை வெளியிடாவிடினும் சஞ்சிகையை 10 வது ஆண்டு ஆரம்பமுதல் 64 பக்கங்களுடன் வெளியிட ஆவலுடையேம். பத்திரிகாசிரியர்.

முக்கிய அறிவிப்பு.

சந்தாதாரர்களின் விலாசங்கள் அச்சடித்து வைத்திருந்த பிரதிகளனைத்தும் ஆய்விட்டபடியால், 9-வது ஆண்டு தொடங்கி மறுபடி அச்சியற்றப்படவேண்டுமாதலின் உடனே ஆடிமாதம் 10, 15 தேதிகளுக்குள் பணம் அனுப்பிவிடுகிறவர்களுக்கும் வி. பி. வந்தவுடனே பணங்கட்டிப் பெற்றுக்கொள்கிறவர்களுக்குமே பழைய நம்பர் நிலைக்கும். பிறகு பணம் அனுப்புகிறவர்களுக்கும் வி. பி. யை வாபீஸ்செய்து பிறகு சேருகிறவர்களுக்கும் புது நம்பர்கள் கொடுத்து வரப்படும். ஆதலின் சீக்கிரம் சந்தாவைச் செலுத்திவிட்டால் பழைய நம்பரையே சுலபமாகக் கடிதங்களில் குறிக்க அனுகூலமாக விருக்கும். பத்திராதிபர்.

தபால் கொள்ளைக்காரர்கள்.

(438-ம் பக்கத் தொடர்ச்சி)

இரவணப்பன் உடனே தன் ஊருக்குச் சென்று விசாரித்தபோது, அவளை வடநாட்டிலிருந்து ஒரு வாலிபன் வந்து மணம் செய்துகொண்டு போய் விட்டதாய்க் கேள்விப்பட்டான். அவ்வாலிபன் இவனில் பாதி செல்வம் கூட இல்லாதவனென்றும் தெரிந்தது.

இப்போது அவன் மனநிலைமை மிக்க கலவரத்தில் வந்துவிட்டது. பாதி பித்தம் பிடித்தவனாய்விட்டான். எல்லா உலக விவகாரமும் மறந்துவிட்டான். தான் காதலித்த கன்னிகையை மணம்புரிந்துகொண்டவன்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்ற ஒரே பிடிவாதம்

அவன் மனதில் நிலையாய்விட்டது. அதற்காகவே தன் செல்வத்தையும் தன் முயற்சி முழுவதையும் உபயோகிப்பதென்று தீர்மானித்துக்கொண்டான். இதே எண்ணத்தோடு அவன் தன் தேசத்தைவிட்டுப் புறப்பட்டான்.

தன் நாட்டை விட்டு வெளிப்பட்ட இரவணப்பன் வடதேசம் சென்று பல இடங்களிலலைந்து திரிந்து கடைசியில் கமலாம்பாள் வசிக்குமிடத்தைக் கண்டுகொண்டான். இனி தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டியதே அவன் வேலை. அச்சமயம் கமலாம்பாள் முதல் குழந்தையொரு பெண்குழந்தை பெற்றிருக்கிறாள். அப்போது அப்பெண்ணுக்கு ஐந்து வயதாயிற்று.

இரவணப்பன் ஒருநாள் இரவு அவர்கள் வீட்டிற்குள் புகுந்து அக்குழந்தை தொட்டிலில் சயனித்துக்கொண்டிருக்கையில் அதைக் களவாடிக்கொண்டுபோய் நவீனபுரியிலுள்ள மார்க்கபந்து என்ற ஒரு ஹோட்டல்காரனிடம் வளர்க்கும்படி ஏற்பாடு செய்துவிட்டான். அதுமுதல் அவன் தன் கண்ணோக்கத்தை விடாமல் வைத்திருந்தான். இதோ இருக்கிறதே கோமளவல்லி என்ற பெண் இதுதான் அப்பெண்" என்றான்.

அதுவரையில் மிக்க வியப்போடு யாவும் கேட்டுக்கொண்டிருந்த கோமளவல்லி அம்மொழிகளைக் கேட்டதே ஆத்திரத்தோடு ஓடிப்போய் இரங்கநாதனிடம் முழங்காற் படியிட்டு, "அய்யா! அய்யா! உனக்கு என் தாய்தந்தையர் தெரியும். அவர்கள் பெயரென்ன? நான் யார்? உண்மையில் நான் யார்? தயவு செய்து கூறும்" என்றாள்.

இரங்கநாதன் "சற்று பொறுமையாய்க் கேள் யாவும் கூறிவிடுகிறேன். என் காலம் மிகக் கொஞ்சமே யிருக்கிறது" என்று கூறிவிட்டுக் கதையைத் தொடங்கினான்.

அவனுடைய வஞ்சனை யொருவித திருப்தியடைந்தது. எவ்வாறெனின், தன் குழந்தை காணாமற்போய்விட்டதே கமலாம்பாள் அதே வியாகூலத்தால் இரண்டு மூன்று வருடங்களில் மடிந்துபோய்விட்டாள். அவள் கணவனும், புத்திரியும் மனைவியும் போனதால் சீக்கிரம் கிழப்பருவமும் பலகீனமு மடைந்துவிட்டான். ஆகையால் அவன் தனக்குத் துணையாகவும் அபிமான புத்திரனாகவும் ஒரு வாலிபனை வளர்த்துக்கொண்டான்.

ஆனால் அவ்வாலிபன் சுத்த அயோக்கியனாய், எல்லாத் துஷ்டத்தனத்திலும் பழக்கமுடையவனாகிவிட்டான். கிழவன் பலபேரைக்கொண்டு புத்திகூறியும் அவன் கொஞ்சமேனும் வழிக்கு வரவில்லை. ஆகையால் கிழவன் தன் ஆஸ்தியில் கொஞ்சமேனும் அவ்வாலிபனுக்கு வைக்கலாகாது எனத் தீர்மானித்துக்கொண்டான். கிழவன் அவ்வாறே மரண சாதனம் எழுத உத்தேசித்திருந்தான். கிழவனுக்கு வெறுப்புண்டானபிறகே சாமிநாதன் என்ற அவ்வாலிபன் இரயிலில் தபால் ஏஜெண்ட் வேலையில் அமர்ந்தான். கிழவன் மரணசாதனம் எழுதிவிட்டால் சாமிநாதனுக்கு ஒரு காசுகூட கிடைக்காது. ஆனால் எழுதாமலே இறந்துபோனால் யாவும் இவனுக்கே கிடைக்கும். இச்சமயம் சாமிநாதன் எப்படியோ தற்செயலாய் இரவணப்பனைக் கண்டு அவனோடு சினேகமாகிவிட்டான். இரவணப்பனுக்கும் கிழவன்மேல் வஞ்சமிருப்பதால், அவன், சாமிநாதன் கிழவன் ஆஸ்தி முழுமையும் அடைவதற்கு வழி காட்டினான். எவ்வாறெனின் ஒருநாள் இரவு கிழவன் நித்திரையிலிருக்கும்போது இருவரும் அவன் அறைக்குள் நுழைந்து அவனை மிகக் குரூரமாய்க் கொன்றுவிட்டார்கள். அதுமுதல் ஆஸ்தி முழுமையும் சாமிநாதனே அனுபவித்து வருகிறான்.

ஆனல் அக்காலம் முடிந்துவிட்டது. ஏனெனில் நியாயமான வாரிசு சமீபத்திலிருக்கிறது. கொல்லப்பட்ட கிழவன் கோபாலுசாமி சர்தார் இந்தக் கோமளவல்லியின் தந்தை. இவளே அந்த ஆஸ்தி முழுமைக்கும் சுதந்தரக்காரி.

நான்ருன இரவணப்பன்; என் வஞ்சம் இதோடு நிற்கவில்லை. சாமிநாதனையும் இதோவிருக்கும் மூன்று கள்ளரையும் ஒரு கூட்டமாய்ச் சேர்த்து தபாற்கொள்ளையை நடக்கச்செய்வித்தேன். இனி என் வேலை நெருங்கிவிட்டது" என்றதும் மல்லாந்து புரண்டு ஆவியை விட்டான்.

இனி நமது கதை முடிவிற்கு வந்துவிட்டது. நடந்த விசாரணையில் மூன்று கள்ளர்கள்மேலும் சாமிநாதன் மேலும் தபாற்கொள்ளைக்குற்றம் ருசுவாய்விட்டதோடு, சாமிநாதன்மேல் கோபாலு சர்தாரைக் கொன்ற குற்றமும் ருசுவாகிவிட்டது. ஆகையால் அவன் பிராணதண்டனை யடைந்தான். மற்ற மூவர்க்கும் 20 வருடம் தீபாந்தர சிக்ஷை விதிக்கப்பட்டது.

அம்பலவாணன் பூரண நிரபராதி யென்று நன்ருய் ருசுவாய்விட்டது. ஐந்தாறு மாதங்களுக்குள் அவன் தபாலாபீஸ் தலைமையதிகாரியாய்விட்டான். மறுமாதம் கோமளவல்லிக்கும் அவனுக்கும் மணம் நடந்து அவர்கள் என்றைக்கும் ஆனந்தவிங்கின் அன்பார்ந்த நண்பர்களாய்ச் சுகத்தோடு வாழ்ந்து வந்தார்கள். தேவராஜுலு தன் குற்றவாளியையும் ஆனந்தவிங் கண்டுபிடித்ததற்காக மிக்க நன்றிபாராட்டினன். ஆனந்தவிங் இதில் மிக்க புகழும் செல்வமுமடைந்தான்.

முற்றிற்று.

ஆரணி - குப்புசாமி முதலியார்.

ஓர் அதிசய அறிவிப்பு.

நமது சந்தா நண்பரில் ஒருவரான P. R. சங்கரையர், வலிவலம் என்பவர், "மேல்விலாசம் தமிழில் அச்சடித்து அனுப்ப, பலதரம் எழுதியும் கவனிக்காததினல் 9-வது வருஷ சஞ்சிகை நமக்கு அனுப்பவேண்டியதில்லை" என்று எழுதி யிருக்கிருர். அவர்மட்டும் தமிழில் எழுதி ஆங்கிலத்தில் கையொபபம் போட்டிருப்பதோடு மேல்விலாசமும் ஆங்கிலத்திலேயே எழுதியிருக்கிருர்.

மேல்விலாசம் ஆங்கிலத்தில் வரையவேண்டு மென்பதே தபால் இலாகாவின் நோக்கம்—நம் நாட்டாருக்குப் பத்திரிகை விஷயத்தில் இத்தகைய அபிமானமிருந்தால் நமது நாடு எவ்வாறு க்ஷேமமடையுமென்பதை நம் சந்தா நேயரே சிந்திக்கவேண்டும். பத்திரிகாசிரியர்.

பொது சமாச்சாரம்.

ஓர் அதிசயமான ஈச்சமரம் :—தாட்பத்ரி தாலுக்கா, ராயல் சேரு என்னும் கிராமத்திற்கு 3 மைல் தூரத்தில் இருப்புப்பாதைக்கு அருகாமையில் 20 அடி உயரமுள்ள ஈச்சமரம் ஒன்று இரவு பனிரெண்டு மணிக்கு விழத்தொடங்கிச் சரியாய் பகல் உச்சிநேரத்திற்குத் தரையில் சாஷ்டாங்கமாய் விழுந்துவிடுகிறது. அது சரியாய் மறுபடியும் பகல் உச்சிநேரத்திற்கு நிமிரத்தொடங்கி இரவு 12 மணிக்கு அது தன் சரியான நிலைமையை யடைகிறது. மரத்தின் அடிவாரத்தில் கொஞ்சம் வளைந்தாற்போல் இருக்கிறது. அந்த வளைவிலிருந்து மரம் கீழே விழவும் நிமிரவும் தொடங்குகிறது. சுற்றிலுள்ள கிராமத்தார் நூற்றுக்கணக்காய் அந்நூதனக் காக்ஷியை தினே தினே பார்க்கப் போகிருர்கள். "இந்து"

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

உருத்ரோத்காரி௵ ஆடி௴—கலி 5025—சாலிவாகனம் 1846
பசலி 1333—கோல்லம் 1098-99—ஹிஜரி 1341-42
இங்கிலீஷ் 1923௵ ஜூலை௴—ஆகஸ்டு௴

ஆடி௴	ஜூலை௴	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
						[ஞயன புண்ய]காலம்
1	16	திங்	திரி53-50	ஆயி24-35	சி24-35ம	கடகரவி-நா 11-35 தக்ஷி
2	17	செவ்	சது50-0	மக22-55	சித்60	கரிநாள்
3	18	புத	பஞ்45-40	பூர20-58	அமி60	ஸ்கந்தபஞ்சமி
4	19	வியா	சஷ்40-45	உத்18-0	ம18-0சி	சஷ்டி, குமார சஷ்டி
5	20	வெ	சப்35-33	அஸ்14-8	அ14-8சி	வித்தியாரம்பம் செய்ய
6	21	சனி	அ29-58	சித்11-23	ம11-23அ	பிரயாணம் விலக்
7	22	ஞா	நவ24-10	சுவா7-40	சி7-40ம	லக்ஷ்மி விரதாரம்
8	23	திங்	தச18-20	விசா3-45	ம3-45சி	வைவசுதமன்வா
				அனு59-57		டியுடுக்க, வாக
9	24	செவ்	ஏ12-40	கேட்56-25	ம56-25அ	மத்வ சர்வ ஏகா
10	25	புத	துவா7-8	மூல53-23	ம53-23அ	பிரதோஷம், கரி
11	26	வியா	திர2-23	பூரா51-8	சித்60	பவித்திராரோப
			சது58-50			அவமாகம்
12	27	வெ	○55-15	உத்49-40	சி49-40ம	பிரதமயஜுர்வே
13	28	சனி	பிர53-50	திரு50-3	சித்60	ஆஷாட பகுளம்
14	29	ஞா	துதி53-43	அவி51-40	ம51-40சி	காதுர்மாஸய து
15	30	திங்	திரி55-15	சதை54-53	சி54-53ம	தானியம், மாடு
16	31	செவ்	சது58-23	பூரட்59-28	ம59-28சி	பிரயாணம் விலக்
17	1	புத	பஞ்60	உத்ரட்60	சித்60	திருதின ஸ்பிருக்
18	2	வியா	பஞ்2-50	உத்ரட்5-35	சித்60	குளம், கிணறு
19	3	வெ	சஷ்8-15	ரேவ12-33	அமி60	வித்தியாரம்பம்
20	4	சனி	சப்14-15	அசு20-0	சித்60	கரிநாள்
21	5	ஞா	அ20-10	பர27-18	சித்60	அடுப்புவைக்க,
						உபயோகிக்க
22	1923௵ ஆகஸ்டு௴ 6	திங்	நவ25-23	·ẋ·கிரு33-53	ம33-53அ	கிருத்திகை
23	7	செவ்	தச29-30	ரோ39-18	அ39-18சி	
24	8	புத	ஏகா32-8	மிரு43-20	சித்60	
25	9	வியா	து33-10	திரு45-40	ம45-40அ	
26	10	வெ	திர32-30	புன46-33	சி46-33ம	கே / 4௳ கட-
27	11	சனி	சது30-28	பூச45-50	சி45-50ம	13 ,, கட-
28	12	ஞா	●26-58	ஆயி43-55	சி43-55ம	19 ,, சிம்-
29	13	திங்	பிர22-18	மக41-5	மர41-5சி	
30	14	செவ்	துதி17-0	பூர37-28	சி37-28அ	குரு / சனி
31	15	புத	திரி11-8	உத்33-25	அ33-25ம	
32	16	வியா	சது5-5	அஸ்29-10	சித்60	சிம்மரவி-நா 3½-30, நாக
			பஞ்58-50			பஞ்சமி, கருடபஞ்சமி

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE
"ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY ST., MADRAS.